உ
சிவமயம்

# சந்நிதியான்

## அற்புதங்கள்

### பாகம் ஆறு



ந.அரியரத்தினம்
தொண்டைமானாறு.

2016

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்நிதியான்

## அற்புதங்கள்

### பாகம் ஆறு

ந.அரியரத்தினம்

2016

தொண்டைமானாறு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைப்பு :- சந்நிதியான்

விடயம் :- அற்புதங்கள் - பாகம் ஆறு

ஆசிரியர் :- ந. அரியரத்தினம்

பதிப்பு :- முதற்பதிப்பு 2016 [01.04.2016]

பதிப்புரிமை :- ஆசிரியர்க்கு

பக்கம் :- 55

அச்சுப் பதிப்பு :- தமிழ்ப் பூங்கா - நெல்லியடி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்

**உள்ளே** **பக்கம்**


முன்னுரை

ஆசியுரைகள்

அணிந்துரை

| | |
|---|---|
| சந்நிதியான் ஒன்று | 01 - 06 |
| சந்நிதியான் இரண்டு | 07 - 11 |
| சந்நிதியான் மூன்று | 12 - 15 |
| சந்நிதியான் நான்கு | 16 - 19 |
| சந்நிதியான் ஐந்து | 20 - 23 |
| சந்நிதியான் ஆறு | 24 - 27 |
| சந்நிதியான் ஏழு | 28 - 31 |
| சந்நிதியான் எட்டு | 32 - 36 |
| சந்நிதியான் ஒன்பது | 37 - 40 |
| சந்நிதியான் பத்து | 41 - 44 |
| சந்நிதியான் பதினொன்று | 45 - 48 |
| சந்நிதியான் பன்னிரண்டு | 49 - 51 |
| சந்நிதியான் பதின்மூன்று | 52 - 55 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## சமர்ப்பணம்

எமக்காக மட்டுமன்றி பிறருக்காகவும் வாழ்வதே
உண்மையான வாழ்க்கையாகும். இத்தகைய
நிலைக்கு அடியேனை ஆளாக்கிய எனது
தாய், தந்தை இருவருக்கும் இந்நூலை
காணிக்கையாகச் சமர்ப்பிக்கின்றேன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

தொண்டைமானாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயச் சூழலில் உள்ள சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைபண்பாட்டுப் பேரவை ஞானச்சுடர் என்ற சமயச் சஞ்சிகையை 1998 ஆம் ஆண்டு தை மாதம் தொடக்கம் மாத வெளியீடாக வெளியீடு செய்து வருகின்றது.

இந்த ஞானச்சுடர் சஞ்சிகையில் சந்நிதியான் என்ற தலைப்பில் கலியுகக் கந்தன் சந்நிதி முருகன் அடியவர்களுக்கு நிகழ்த்தி வருகின்ற அற்புதங்களை சந்நிதி கருணையுடன் கட்டுரைகளாக தொடர்ந்து 2011 ஆம் ஆண்டு வரை மாதமாதம் பதினான்கு வருடங்கள் அடியேன் எழுதி வந்துள்ளேன். அதன் பின்பு புலம்பெயர்ந்து வாழ்ந்து வருவதால் கனடாவில் இருந்தவாறே எனது பணியை தொடர்ந்து வருகின்றேன். சுந்நிதியான் அற்புதங்கள் பாகம் ஐந்து 17.08.2015 இல் கனடா ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தில் வெளியீடு செய்யப்பட்டது. தற்போது சந்நிதியான் பாகம் 06 தொண்டைமானாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தில் 01.04.2016 வெள்ளிக்கிழமை வெளியீடு செய்யப்படுகின்றது. இதில் இடம்பெறும் முதல் இரண்டு அற்புதங்களும் இதற்கு முன்பு இடம்பெறாதவை ஏனையவை 2003 ஆம் ஆண்டு ஞானச்சுடரில் இடம்பெற்ற நிகழ்வுகளாகும்.

சந்நிதியான் என்ற தலைப்பில் அடியேனால் எழுதப்பட்டு வரும் கட்டுரைகள் இலங்கையிலும் உலகம் முழுவதும் பரந்து வாழும் சந்நிதியானது அடியவர்களை அவனது ஆலயத்திற்கு அழைத்துச் செல்வது போன்று உணர்வையும் அவனது அருளைப் பெறுவதற்குமான ஒரு மானசீகமான தொடர்பையும் ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றது எனக் கூறுவதில் தவறு இல்லை எனக் கருதுகின்றேன்.

சந்நிதியான் என்ற தலைப்பில் வெளிவருகின்ற இந்தக் கட்டுரைகளை எல்லாம் அடியேன் எழுதுகின்றேன் எனக் கூறுவது பொருத்தமில்லை. எனக்குள் இருந்து செயற்படுகின்ற ஏதோ ஒரு சக்தியின் துணையுடன் தான் இவற்றை எல்லாம் அடியேனால் தொடர்ந்து எழுத முடிகின்றது என்பதை என்னால் நன்கு உணர முடிகின்றது. அடியேனும், அடியேனது துணைவியாரும் மட்டுமல்ல, எமது இருவரது மூதாதையர்களும் சந்நிதி ஆலயத்துடன் தொடர்புள்ளவர்களாக வாழ்ந்து வருகின்றனர். உதாரணமாக ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தின் மூலஸ்தானத் தீர்த்தக் கிணற்றினையும் ஆலய வாசற் கதவினையும் எனது தாயாரின் பேரனான வல்வெட்டித்துறை ஆதிகோவிலடியைச் சேர்ந்த வ.முருகுப்பிள்ளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் தனது திருப்பணி உபயமாக அமைக்கும் பேற்றினைப் பெற்றுள்ளார்கள். இதற்குச் சான்றாக அவருடைய நாமம் தீர்த்தக் கிணற்றின் கட்டில் பொறிக்கப்பட்டிருப்பதை நாம் இன்றும் காணலாம்.

இதேபோல வல்வை வைத்தீஸ்வரன் ஆலயத்தில் கந்தசஷ்டிக் காலத்தில் சூரன்போருக்குப் பயன்படுத்தப்படும் பிரமாண்டமான சூரனையும் இந்தியாவில் இருந்து கொண்டு வந்து அவரே உபகயமாக வழங்கியுள்ளார். சூரன் பீடத்தில் எனது பூட்டனாராகிய முருகுப்பிள்ளையின் பெயரும் அதற்கு உதவியர்களது பெயர்களது 01.10.1898 இல் உபயமாக வழங்கப்பட்ட காலக்குறிப்பும் இடம்பெற்றுள்ளது. இதே போன்று எனது தாயார் திருமதி நடராசா வள்ளியம்மாள் வல்வை வைத்தீஸ்வரன் ஆலயத்தில் பன்னிரண்டாம் உற்சவத்தின் பொழுது இடம்பெறும் சிவன் பார்வதி திருக்கல்யாணத்திற்கான கல்யாண மண்டபத்தை தனது உபயமாக அமைத்து எமக்கும் வழிகாட்டியுள்ளார்.

இவ்வாறான ஒரு ஆலயத்திருப்பணிப் பாரம்பரியம் எமது மூதாதையருக்கு இருந்து வருவது மட்டுமன்றி ஸ்ரீ செல்வச்சந்நிதி முருகன் மீது ஒரு மானசீகத் தொடர்பும் சிறுவயதிலிருந்தே அடியேனது உள்ளத்துக்குள் இருந்து வந்ததையும் என்னால் நன்கு உணரமுடிகின்றது. எல்லாமே சந்நிதியானது பெருங்கருணை. அடியேன் மட்டுமல்ல சந்நிதியானின் பல்லாயிரக்கணக்கான அடியவர்களும் இவ்வாறே பரம்பரை பரம்பரையாக சந்நிதியானுடன் ஏதோ ஒருவகையான தொடர்பு உள்ளவர்களாக உலகம் முழுவதும் பரந்து வாழ்ந்து கொண்டிருப்பதையும் எம்மால் உணர முடிகின்றது.

இக்கட்டுரைகளில் இடம்பெறுகின்ற நிகழ்வுகள் அனைத்தும் சந்நிதியானது உண்மைச்சம்பவங்கள் என்பதால் உணர்வுகளை மிகைப்படுத்தக் கூடிய சொற்களோ வசனங்களோ இங்கே பயன்படுத்தப்படவில்லை. பாமரமக்களும் வாசிக்கக்கூடியதான இலகுவான இயல்பான சொற்பதங்களே பயன்படுத்தப்பட்டுள்ளன.

எமது செயற்பாடுகள் அனைத்திற்கும் துணையாக இருந்து வழிப்படுத்துகின்ற சந்நிதி முருகனே இந்நூலை வெளியீடு செய்வதற்கும் திருவருள் புரிந்துள்ளான். சந்நிதியானது திருவருள் என்றும் எம் அனைவருக்கும் கிடைப்பதற்கு நாம் அனைவரும் அவனது திருப்பாதங்களைப் பற்றி வணங்குவோமாக!

ஓம் முருகா!

ந. அரியரத்தினம்
தொண்டைமானாறு, 29.03.2016

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குருபாதம்

இரண்டாவது குருமஹா சந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக – நல்லை
ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் வழங்கிய

## அருளாசிச் செய்தி

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையினால் வெளிவரும் ஞானச்சுடர் மாத சஞ்சிகையின் ஆசிரியராகவும் பாடசாலை அதிபராகவும் பேரவையினுடைய வளர்ச்சிக்கு அயராது சேவை செய்த திரு. ந.அரியரத்தினம் அவர்கள் சந்நிதியான் என்கின்ற தொடர் கட்டுரையை எழுதி வெளியிட்டுக் கொண்டிருப்பது மகிழ்ச்சிக்குரியது. ஈழத்தின் பெருமையை நிலைநாட்டும் பல ஆலயங்களுள் சந்நிதி முருகனுடைய ஆலயம் தனித்துவமானது. உடல்நோய், உளநோய் அனைத்தையும் தீர்க்கும் முருகனாக வேண்டுவோர் வேண்டுவதை ஈயும் இறைவனாக அன்றும் இன்றும் என்றும் அன்னதான கந்தன் அருள்பாலித்துக் கொண்டிருக்கின்றான். அவனுடைய சிறப்பையும் ஆலய வரலாற்றையும் அறிய வேண்டியது அனைவரதும் அவாவாக உள்ளது. அதனை ஈடு செய்யும் பொருட்டு திரு. ந.அரியரத்தினம் அவர்கள் மிகவும் தெளிவாகவும் அனைவரும் விளங்கிக் கொள்ளும் வகையிலும் இந்நூலை எழுதிக்கொண்டு வருவது எல்லோராலும் வரவேற்கத்தக்கதாகும். ஆசிரியர் அரியரத்தினம் அவர்களின் தொண்டு மேலும் சிறப்படைய வாழ்த்துகின்றோம். நூல் சிறப்பாக வெளிவந்து முருகனுடைய அருள் அனைவருக்கும் கிடைப்பதாக.

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

15.03.2016

நல்லூர்,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்

குருவே துணை

சந்நிதியான் ஆச்சிரம நிர்வாகி, அமுதகலாயோகி

திரு.செ.மோகனதாஸ் அவர்கள் வழங்கிய

## வாழ்த்துச் செய்தி

சந்நிதியான் ஆச்சிரம சைவகலைப்பண்பாட்டு பேரவையினால் கடந்த பதினெட்டு வருடங்களாக ஞானச்சுடர் மலர் தொடர்ந்து வெளிவந்து கொண்டிருப்பதற்கு மூல காரணியாக விளங்ககுபவன் சந்நிதி வேற் பெருமான் என்று கூறுவதில் மிகையில்லை. அவ் வகையில் அவன் பாதம் பணிந்து போற்றுவதோடு ஞானச் சுடர் ஆரம்ப கால மலர்களில் சந்நிதியான் எனும் தொடரில் சந்நிதி வேலவனது அருட்திறத்தின் மூலம் அடியார்கள் பெற்ற அனுபவத்தை நயம் குன்றாவகையில் ஆக்கமாக வரைந்த அதிபர் திரு.ந.அரியரத்தினம் சந்நிதியான் எனும் தொடரினை மீள் பதிப்புச் செய்வதனூடாக அடியார்களாகிய நாம் ஆன்மீக பலத்தைப் பெறுவதில் வளம் குன்றா வகையில் செயற்படுத்தி வருகின்றார்.

அவரது இத்தகைய பணியைப் போற்றுவதோடு ஆன்மீக நாட்டம் குன்றி வரும் இக் காலகட்டத்தில் அவரது இப் பணி மிகவும் போற்றுதற்குரியதும் அவசியமானதாகவும் கருத வேண்டி உள்ளது. அதிபர் அவர்களது இப்பணி மேன் மேலும் சிறந்து விளங்க சந்நிதிவேலவனை வேண்டி நிறைவு செய்கின்றோம்.

29.03.2016

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்நிதியான் ஒன்று

மெலிந்த தோற்றம், ஒடுங்கிய முகம். பார்த்தால் நோயுள்ளவர் போலவும் ஒருவிதமான போக்குள்ளவர் போலவும் தென்படுவார். நடந்தால் விழுந்துவிடுவாரோ எனக் கூறக்கூடிய தள்ளாடிய நடை அதேநேரம் தேவை இல்லாது யாருடனும் கதைப்பதுமில்லை. தெளிவான சிந்தனை யாருக்கும் இடைஞ்சல் இல்லாது வாழவேண்டுமென்ற கொள்கை அத்துடன் ஆலயத் தொண்டிலேயே முழுக்கவனத்தையும் செலுத்திக் கொண்டிருப்பார். இந்த ஆலயத் தொண்டே தனக்கு வாழ்க்கையில் கிடைத்த மிகப்பெரிய பாக்கியம் எனவும் கருதி வாழ்ந்து கொண்டிருப்பவர். இவருடைய பெயர்தான் ராஜேஸ்வரி. ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தில் எப்பொழுது பூசை நடந்தாலும் ஆலயத்தின் முகப்பில் தெற்கு பக்கமாக உள்ள சிறிய காண்டாமணியைத் தொடர்ந்து சலிக்காது இவர் அடித்துக் கொண்டிருப்பதை யாரும் எப்பொழுதும் அங்கே காணமுடியும். சந்நிதியானுக்கு நேரடியாகவும் மறை முகமாகவும் தொண்டுகள் செய்கின்ற ஏராளம் அடியவர்களில் இவரும் ஒருவர் போலத் தெரிந்தாலும் இவர் சற்று வித்தியாசமான ஆழமான ஈடுபாடு உள்ள அடியவராவர்.

சரியாக இரண்டு தசாப்தங்களாக ஒரே கையினால் மேற்கொண்டு வருகின்ற காண்டாமணி அடிக்கின்ற இவ்வாறான செயற்பாடு சாதாரண செயற்பாடு அல்ல. அத்துடன் வெள்ளிக்கிழமைகள், உற்சவகாலங்கள், கந்தசஷ்டிக் காலங்கள் மற்றும் விசேட தினங்களில் ஒரேநாள் பலதடவைகள் மட்டுமல்ல நீண்டநேரம் தொடர்ச்சியாகவே அதனை அவர் அடித்துக் கொண்டே இருப்பார். உதாரணமாக பிரதி சனிக்கிழமை தோறும் மதியம் இடம்பெறும் சனி திருமுழுக்குப் பூசையின் பொழுது மூலஸ்தானக் கதவு மூடப்பட்ட நிலையில் மூலவருக்கு இடம்பெறும் அபிஷேகம் தொடக்கம் இறுதியாக பூசை நிறைவடையும்வரை சில மணித்தியாலங்கள் தொடர்ச்சியாகவே அந்தமணியை அந்த அம்மையார் அடித்துக் கொண்டிருப்பதை பல அடியவர்கள் பார்த்து உள்வாங்கியிருக்கக் கூடும். இவ்வாறு சந்நிதியானுக்கு பூசை நேரங்களில் மங்களகரமானதும் புனிதமானதுமான ஓசையை வெளிப்படுத்துகின்ற இந்த மணியை அடிப்பதென்பது சந்நிதியானால் அவருக்கு பணிக்கப்பட்ட பணி என்பதை ராஜேஸ் மிகநன்றாகவே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெரிந்தும், உணர்ந்தும், தவறாது முழுமையாக அதனை செயற்படுத்திக் கொண்டிருக்கின்றார். ஆனால் அது சந்நிதியானால் பணிக்கப்பட்ட பணிதான் என்பதை அடியார்களாகிய நாம் தெரிந்து கொள்ளக்கூடிய ஒரு அற்புத நிகழ்வை இங்கே அடியார்களுக்கு வழங்குகின்றோம்.

கடந்த வருடம் அதாவது 2015 ஆம் ஆண்டு சந்நிதியில் வருடாந்த உற்சவம் முடிவடைந்து நவராத்திரி காலத்தில் வழமைபோல ஆரம்பிக்கின்ற கந்தபுராணப்படிப்பு ஆரம்பமாகி கந்தசஷ்டிக் காலத்தை அது அண்மித்துக் கொண்டிருந்தது. கந்தபுராணப் படிப்பை வழமைபோல மேற்கொள்ளுகின்ற விநாசித்தம்பிஐயா, ஜெயகோபால், பூசகர்கள் மற்றும் அடியார்கள் என அனைவரும் அங்கே காணப்படுகின்றனர். மாலைப்பூசை ஆயத்த மணி அடிக்கப்பட்டுவிட்டது. வழமைபோல ஒவ்வொரு பூசைக்கு முன்பும் ஸ்நானம் செய்து பூசைவைக்கும் மரபிற்கிணங்க அன்றும் ஆலயத்தில் ஸ்நானம் செய்து பூசகர் தன்னை பூசைக்கு ஆயத்தப்படுத்திக் கொண்டிருக்கின்றார். மடைப்பள்ளியில் பிரத்தியேகமான இடத்தில் மூலவருக்குரிய அமுதை தயார் செய்யும் இடத்தில் பூசகர்களால் தயார்செய்யப்பட்ட அந்த நைவேத்தியத்தை பூசகர்கள் பட்டினால் மூடி மூலஸ்தானத்திற்கு கொண்டு செல்கின்றனர். இவ்வாறெல்லாம் அந்த மாலை நேரம் பூசை ஆரம்பமாவதற்குரிய முன் ஆயத்தங்கள் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன. இவற்றை அவதானித்துக் கொண்டிருந்த அடியவர்களும் சந்நிதியானது பூசையை கண்குளிரக் கண்டு சந்நிதியானை தரிசிப்பதற்கு ஆயத்தமாகிக் கொண்டிருக்கின்றனர்.

அதேபோல பூசை ஆரம்பிக்கப் போவதை இவர்களைவிடவும் கண்ணும் கருத்துமாகக் கவனித்துக் கொண்டிருக்கும் ராஜேசும் அன்றும் எல்லாவற்றையும் கவனித்து காண்டாமணியை அடிப்பதற்கு வழமைபோல தன்னை ஆயத்தப்படுத்திக் கொண்டு அந்த நாவல் மரத்திற்கு முன்பக்கமாக புதிதாக கட்டப்பட்டிருக்கும் அந்த வளைவுடன் வழமைபோல் சாய்ந்து கொண்டிருக்கிறார். இப்பொழுது பிரதம பூசகர் மூலஸ்தானத்திற்குள் பிரவேசித்து விட்டார். இனிமேல் பிரதம பூசகர் மௌன பூசையை நடாத்துவதற்கு வசதியாக வழமையாகக் கட்டும் அந்த மூக்குத் துணியை கட்டி பூசையை ஆரம்பித்து விடுவார் என்பதை அங்கே உள்ள விடயம் அறிந்தவர்கள் நன்கு விளங்கிக் கொண்டு பூசையை காண்பதற்கு ஆயத்தமாகி விட்டனர். ஆம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பொழுது அவர்கள் எதிர்பார்த்தது போல பிரதமபூசகர் மூலஸ்தானத்தில் மணியை அசைத்து பூசையை ஆரம்பித்துவிட்டார். மூலஸ்தானக் கதவும் திறக்கப்பட்டுவிட்டது. ஆனால் இதுவரை காலமும் தவறாது கண்ணும் கருத்துமாக இருந்து சரியாக ஆலயத்திற்குள் பிரதம பூசகர் தனது மணியை அசைத்து பூசையை ஆரம்பித்ததும் தவறாது காண்டாமணியை அடிக்கின்ற ராஜேஸ் மட்டும் அன்று அந்த மணியை அடிக்கவில்லை. ஆம் பல வருடங்களாக தவறாத தனது கடமையை சரியாக செய்து வந்த ராஜேஸ் அன்று அந்த பூசையின் பொழுது தனது கடமையிலிருந்து தவறிவிட்டார்.

ஆம் பூசைமணி அடித்து பூசை ஆரம்பித்துவிட்டது காண்டாமணி மட்டும் அங்கே ஒலிக்கவில்லை. ஏதோ பிழை நடக்கின்றது. காண்டாமணிச் சத்தம் கேட்கவில்லையே என சிலர் சிந்திக்கின்றனர். சிலர் காண்டாமணியைத் திரும்பிப் பார்க்கின்றனர். ஆனால் கடமை தவறாது அந்த ராஜேஸ் அவர்களோ தன்னை மறந்து அங்கே நித்திரையோ விழிப்போ என்று கூற முடியாத நிலையில் திண்ணையில் சாய்ந்தபடி தன்னை மறந்த நிலையில் காணப்படுகின்றார். அப்பொழுதுதான் என்றுமே இடம்பெறாத அந்த அற்புத அதிசயம் அங்கே நடந்தேறியது.

அங்கே காண்டாமணி அடிக்கப்படவில்லையே என அடியவர்கள் கலகத்துடன் காணப்படுகின்றனர். அந்த அடியவர்களைப் போல குறிப்பிட்ட ஐந்தறிவு உள்ள அந்த கறுத்த நாயும் கலக்கத்துடன் எல்லாவற்றையும் உள்வாங்கி கவனமாக அங்கே நடப்பவற்றை அவதானித்துக் கொண்டிருக்கிறது. அதுமட்டுமல்ல அங்கே அடியவர்களே செயற்பட தவறிய செயற்பாட்டை அந்த நாய் செயற்படுத்தியது. ஆம் தான் எடுக்கவேண்டிய அந்த முடிவை சரியாகவும் அதே நேரம் உடனடியாகவும் அந்த கறுத்த வெண் நாய் எடுத்துவிட்டது. ஆம் அந்த நாய் தாவிச் சென்று ராஜேஸ் காண்டாமணி அடிக்கும் அந்த கையின் பெருவிரலுக்கு அடுத்த விரலை முழுமையாக வாயிற்குள் பலமாக பற்றிக் கொண்டு அவரை இழுத்து இழுத்து எழுப்பத் தொடங்கியது. துடிதுடித்து நித்திரையில் இருந்து விழிப்பது போல வழித்துக் கொண்டார் ராஜேஸ். ஒரு கணம் திகைத்துப்போனாலும் மறுகணம் நிலைமையை உணர்ந்து கொண்டு ஓடிச் சென்று காண்டாமணி அடிக்கின்ற அந்த கயிற்றினைப் பிடித்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம்பெருமானுக்கு செய்கின்ற காண்டாமணி அடிக்கிற தனது வழமையான தொண்டினை வழமை போல நிறைவேற்ற தொடங்கிவிட்டார்.

இதுபற்றி ஏற்கனவே அடியேன் உரையாடி இருந்தாலும் மீண்டும் 15.03.2016 செவ்வாய்க்கிழமை மாலை 3.30 மணியளவில் இராஜேசை அவர் வழமையாக தங்கி இருக்கும் நாவல் மரத்துக்கு முன்னால் சந்தித்து இதுபற்றி அவருடன் உரையாடினேன். அப்பொழுது அவர் "ஓம் பாருங்கோ அண்டைக்கு நான் இந்த இடத்தில் தான் இருந்தனான் சரியா அந்த நேரம் எனக்கு தெரியாமலே நான் என்னை மறந்த நிலையில் இருந்துவிட்டேன். மணி அடிக்க வேணும் என்டதை நான் மறந்தே போனன் அப்பதான் பாருங்கோ அந்த நாய் ஓடிவந்து என்ர இந்த கைவிரலை முழுக்க கவ்வி வாயிக்கை வைத்துக் கொண்டு இழுத்து இழுத்து எழுப்பியது. அதோட நான் எழும்பினவுடன் மணியை அடிக்கச் சொல்லி குலைச்சு குலைச்சு காட்டியது." என என்னிடம் கூறினார். இவ்வாறு அந்த அற்புதமான நிகழ்வுபற்றி அவரிடம் உரையாடிக் கொண்டிருக்கும் போது ஒரு கறுத்த நாயும் அந்த இடம் வந்து சேர்ந்தது. அதனை அடியேன் காட்டி "இது தானா அந்த கறுத்த நாய்?" என வினாவிய போது "ஓம் ஓம் இதுதான்" என்று சிரித்தபடி கூறினார்.

சந்நிதியில் நடப்பவை எல்லாம் சாதாரணமானவை அல்ல அங்கே இவ்விதமான அற்புத நிகழ்வுகள் நடைபெற்றுக் கொண்டுதான் இருக்கின்றன. ஆனால் அவை தொடர்பான காரண காரியங்களையோ அவைதொடர்பான பூர்வீக தொடர்புகளையோ எமது சராசரி அறிவினால் நாம் கண்டறியவோ வெளிப்படுத்தவோ முடியாத நிலையே காணப்படுகின்றது.

மணி அடிப்பதென்து சாதாரணவிடயமல்ல அதை நான் சரியாகத்தான் செய்ய வேண்டும் சரியான முறைப்படி தான் செய்ய வேண்டும் எனக் கூறிய ராஜேஸ் அது தொடர்பான சில விளக்கங்களையும் அடியேனிடம் தெரிவித்தார். அப்படிச் சரியாக செய்யாவிட்டால் சந்நிதியான் தனக்கு நிச்சயம் தண்டனையை வழங்குவான். நான் மணி அடிப்பதென்பதும் அவர் சொல்லித்தான் நான் செய்கின்றேன்... அவர் அடிக்கடி எனக்கு சொல்லுவார் பாருங்கோ... என்பது போன்ற நாம் வார்த்தைகளால் விபரிக்கமுடியாத மிக ஆழமான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆன்மீக உணர்வு சார்ந்த விடயங்களை அடியேனுடன் பகிர்ந்து கொண்டார்கள். ஆம் சந்நிதியில் எல்லாம் அவன் செயலே.

ஆனாலும் ராஜேஸ் தொடர்பாக வெளிப்படுத்தக்கூடிய வேறு சில தகவல்களை இந்த சந்தர்ப்பத்தில் இங்கே அடியார்களுக்கு வழங்குவது பொருத்தமானது. சந்நிதிக்கு வழிபடவருகின்ற அடியவர்கள் தாமாக விரும்பி வழங்குகின்ற சிறியளவு பணத்தை இராஜேஸ் தனது ஒரு சில வரையறுக்கப்பட்ட சொந்த தேவைகளுக்கு பயன்படுத்து கின்றார் அதேநேரம் மிகுதிப் பணத்தை சிறிது சிறிதாக சேமித்து பெரிய காண்டாமணி திருத்த வேலைகளுக்கு 12000/= ரூபா வழங்கியுள்ளார். அதே போன்று ஆலயத்திருப்பணி வேலைகளுக்காக 15000/= ரூபா வீதம் இரண்டு முறை வழங்கியுள்ளார். இதேபோன்று ஏனையவர்களுக்கு இடைஞ்சல் இல்லாமல் இருக்க வேண்டுமென்பதற்காக தனது கடைசிக் காலத்திற்கு பயன்படுத்துவதற்காக ஒரு சிறுதொகை பணத்தை ஆலயச்சூழலில் மிக நம்பிக்கையான ஒருவரிடம் கொடுத்தும் வைத்துள்ளார்.

ஆலயத்தில் மணி அடிக்கும் தொண்டுடன் மட்டும் அவர் நின்று விடவில்லை. அவர் ஆலயத்திற்கு வந்தகாலம் தொடக்கம் உள்வீதி முகப்பு உட்பட ஆலயத்தில் எங்கெங்கு கூட்டி துப்பரவாக்க வேண்டுமோ அவற்றை எல்லாம் இரவோ பகலோ எந்த நேரமானாலும் இன்றுவரை கூட்டித்துப்பரவாகவே வைத்திருக்கிறார். அதேபோன்று வள்ளி அம்மன் சந்நிதி, நவக்கிரக சந்நதி ஆகியவற்றுக்கு அண்மையில் காணப்படும் கழிவுநீர் வாய்க்கால்களை கிழமைக்கு இரண்டு தடவைகள் தனது கைகளால் துப்பரவு செய்து வருகின்றார்.


சந்நிதியில் ராஜேசின் பட்டறிவு சாதாரணமானது அல்ல. அவர் வழிபட வருகின்ற அடியவர்கள் பற்றி நன்கு அறிந்து வைத்திருக்கின்றார். அதேபோன்று பூசகர்கள் பற்றியும் தெளிவாக தெரிந்து வைத்திருக்கின்றார்.

**"சந்நிதியானிடம் எதையும் கேட்டு பெற்று கிடைப்பதை விட கேளாமல் இருக்க எமக்கு கிடைப்பது தான் எமக்கு மிகப்பெரிய ஆனந்தம்"** என ஆன்மீக வாழ்வின் யதார்த்தத்தை மிக நன்றாகவே உணர்ந்து வைத்திருக்கின்றார். பருத்தித்துறை 1ம் கட்டையடியை சொந்த இடமாகக் கொண்ட ராஜேஸ் தனது கணவனது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறைவின் பின் சரியாக 20 வருடங்களுக்கு முன்பு இங்கே வந்து சேர்ந்துள்ளார். 20 வருடங்களுக்கு முன்பு வருகின்ற பொழுது இருந்த தோற்றத்துடனேயே அவர் இன்றும் காணப்படுகின்றார்.



சந்நிதியானது அழைப்பிற்கிணங்க சந்நிதியானிடம் வந்து தொண்டு செய்துகொண்டிருக்கும் ராஜேசின் பாத்திரப்படைப்பு தனித்துவமான ஒன்றுதான்.

ஓம் முருகா !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சந்நிதியான் இரண்டு

ஆலயத்திற்கு சென்று ஆண்டவனை வழிபடுகின்ற ஆன்மீக நம்பிக்கை உள்ளவராக ஒருவர் இருக்கலாம். ஆனால் அதைவிட சிறப்பானதும் முக்கியமானதும் ஒருவர் தனது வாழ்க்கையில் தான் செய்கின்ற கடமைகளைச் செய்து தான் செய்கின்ற தொழிலில் தொழில் தர்மத்தை கடைப்பிடித்து வாழ்க்கையை நடாத்துவதுதான் என்ற கொள்கையில் அசைக்க முடியாத நம்பிக்கை உள்ளவர். அது மட்டுமன்றி கடந்த 35 வருடங்களுக்கு மேலாக இவ்வாறு கடமைதவறாது தர்மநெறியில் நின்று தனது தொழிலை மேற்கொண்டு வருவதுடன் தனது அன்றாட வாழ்க்கைப் பயணத்தையும் இவ்வாறே வழிப்படுத்தி வருகின்றார். கடமைக்கு முதலிடம் கொடுத்து தர்மநெறிதவறாது செயற்பட்டு நிறைவான குடும்ப வாழ்வை இன்று வாழ்ந்து கொண்டிருக்கும் இவரது வாழ்க்கைப் பயணத்தில் இவருக்கு ஆண்டவன் நிகழ்த்திய அந்த அற்புத நிகழ்வை இங்கே அடியார்களுக்கு வழங்குகின்றோம்.

பெயர் நித்தியானந்தம் ஸ்ரீபத்மநாதன் ஆனால் இவரை கண்ணன் என்றே பொதுவாக அனைவரும் அழைப்பார்கள். வயது 58 இவருடைய சொந்த இடம் வல்வெட்டித்துறை. இளமைக் காலத்தில் இவரது குடும்பம் வறுமையை எதிர்நோக்கியது அத்துடன் அது பெரிய குடும்பமாகவும் காணப்பட்டது. அவ்வாறு வறுமையில் வாழ்ந்துகொண்டிருந்ததால் போலும் 16 வது வயதிலேயே தான் தொழில் செய்வது பற்றி சிந்திக்கத் தொடங்கிவிட்டார். ஆம் வயரிங் வேலை செய்து அத்தொழில் மூலம் தனது எதிர்கால வாழ்க்கையை கொண்டு நடாத்துவோம் என தூர நோக்கில் அப்பொழுதே முடிவு செய்து கொண்டார். இதற்கு வசதியாக தனது மாமன் முறையிலுள்ள ஒருவரின் கீழ் இரண்டு வருடங்கள் அந்த தொழிலை பழகிக்கொண்டார். அதன்பின் 1980ஆம் ஆண்டு வேறு ஒருவருடன் தொழிலுக்கு சேர்ந்து மூன்று வருடங்கள் 10 ரூபா நாள் சம்பளத்திற்கு வேலை செய்து தனது குடும்பத்தின் சுமையை குறைப்பதற்கும் பங்காற்ற ஆரம்பித்து விட்டார். இவ்வாறு இரண்டு வருடங்கள் தொழில் அறிவையும் மூன்று வருடங்கள் தொழில் அனுபவத்தையும் இளம் வயதிலேயே பெற்றுக்கொண்டார் இதன்பின்பு வயறிங் தொழிலை சுயமாக செய்யக்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூடிய அறிவும், திறனும். நம்பிக்கையும் ஏற்பட்ட நிலையில் அவர் 1983 ஆம் ஆண்டு அத் தொழிலை சுயமாகச்செய்யும் முயற்சியில் ஈடுபடத் தொடங்கிவிட்டார். ஆனாலும் புதிதாக தொழிலை ஆரம்பித்த நிலையிலும் அத்தொழிலில் இவர் அதிகம் பிரபல்யம் அடையாத நிலையிலும் சிறிய சிறிய வேலைகளே இவரை நாடிவந்து கொண்டிருந்தன.

அப்பொழுதுதான் அவருடைய வேலையின் திறமையையும் தொழிலில் அவர் மேற்கொண்டுவரும் நேர்மையும் அறிந்து கொண்ட ஒரு அன்பர் கண்ணனுக்கு ஓரளவு பெரிய அந்த வேலையை முதன் முதல் வழங்க முன்வந்தார். அவ்வாறு அந்த பெரிய வேலை அவரை நாடிவந்த பொழுது அவரது உள்ளத்தில் மட்டற்ற மகிழ்ச்சி கரை புரண்டோட ஆரம்பித்தது. ஆனாலும் வேலை வழங்க முன்வந்தவருக்கு அதனை அதிகம் வெளிப்படுத்தாது வேலைக்கு சம்மதம் தெரிவித்ததுடன் குறுகிய ஒரு சில நாட்களுக்குள் வேலையை தொடங்குவதாகவும் ஒப்புக்கொண்டு விட்டார். இப்பொழுது கண்ணனுக்கு அளவுகடந்த மகிழ்ச்சி மட்டுமல்ல தன்னைப் பற்றி ஒரு பெருமிதமும் ஏற்பட்டது. அதேநேரம் தான் வணங்குகின்ற தெய்வங்களுக்கெல்லாம் மனம் உருகி உள்ளத்தால் வழிபாடும் செய்து கொண்டார். அவர் இறைநம்பிக்கை உள்ள சராசரி மனிதனாக இருந்தாலும் இப்பொழுது தனது தொழிலில் தனக்கு கிடைத்திருக்கும் உயர்வு இறைவன் தன்மீது காட்டிய பெருங்கருணையே என உணர்ந்து கொண்டார். இதனால் அவரது இறைநம்பிக்கை மேலும் ஆழமாக அவரது உள்ளத்தில் ஊடுருவிக் கொண்டது.

கண்ணன் அந்த அன்பருக்கு வாக்களித்த படி அந்த ஒரு சில நாட்கள் கடந்த நிலையில் உடனடியாகவே வேலையை ஆரம்பிப்பதற்குரிய முன் ஆயத்தங்களை எல்லாம் மேற்கொள்ள ஆரம்பித்துவிட்டார். அந்த வேலையை எப்படி எப்படி எல்லாம் செய்ய வேண்டுமென மனதிற்குள் திட்டமிட்டுக் கொண்டார். அவ்வாறு திட்டமிடும் பொழுதுதான் அவருக்கு அந்தப் பிரச்சினை வெளிப்பட்டது. ஆம் வேலைக்குச் சென்று அங்கே வேலையை ஆரம்பிக்கின்ற முதல்நாளே தனக்கும் தனது உதவியாளருக்கும் இரண்டு இறாத்தல் எடையுள்ள அந்த சிறிய மடத்தல்கள் இரண்டு தேவைப்படுகின்றன என்பதை உணர்ந்து கொண்டார். ஆனால் அவரிடம் ஒரேயொரு மடத்தலே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவருக்கு சொந்தமாக இருக்கிறது. இப்பொழுது அவரது சிந்தனை முழுவதும் மேலதிகமாகத் தேவைப்படும் அந்த மடத்தல் பற்றியதாகவே அமைந்திருந்தது எப்படி அதனைப் பெற்றுக்கொள்வது யாரிடம் அதனை கைமாறாக வாங்குவது என சிந்திக்க ஆரம்பித்தார். தன்னை ஓரளவு புரிந்து கொண்டவர்கள் தன்னுடன் ஓரளவு நெருக்கமாகவும் பழகுகின்றவர்கள் என்ற வகையில் வித்தனை ஒழுங்கையில் அமைந்துள்ள ஆறுமுகம் மேத்திரியார் வேலைத்தளத்திற்கு (போட்யாட்) சென்றார். மடத்தல்கள் அங்கே இருக்கின்றன என்பதாலும் அதனை அங்கே வாங்கமுடியும் என்ற நம்பிக்கையாலும் அதனை பெற்றுக்கொள்ளும் முயற்சியில் அங்கே சென்றார். ஆனால் அங்கேயிருந்த மடத்தல்கள் கடற்கரை வள்ளம் திருத்துவதற்காக கொண்டு செல்லப்பட்டுவிட்டதால் அதனை அங்கே பெறமுடியாத சூழ்நிலை காணப்பட்டது. வேறு எங்கே இருக்கும் எங்கே வாங்கலாமென யோசித்து சிவகுகதாசன் ஆசிரியர் வீட்டில் அது இருக்கலாம் என நினைத்து அங்கே சென்றார். அங்கேயும் அது கிடைக்கவில்லை இது அவருக்கு பெரிய ஏமாற்றத்தை கொடுத்தது ஏனென்றால் அந்த மடத்தல் அன்றைய வேலைக்கு அவருக்கு மிகமிக அவசியமானது அது இல்லாமல் வேலையை ஆரம்பிக்கவே இயலாது. இன்றைக்கே வேலைக்கு போக வேண்டும். தற்பொழுது காலை 7.30 மணி ஆகிவிட்டது. புதிதாக பணம் கொடுத்து அதனை வாங்க இயலாத கஷ்டநிலை இதனை கைமாறாகத்தரக் கூடியவர்கள் ஒரு சிலரே அவ்வாறான அந்த ஒரு சிலரிடம் சென்றும் அது கிடைக்கவில்லை. நேரமோ நெருங்கிக்கொண்டு இருக்கிறது.

இந்நிலையில் மடத்தலை வேறு யாரிடம் வாங்கலாமென மீண்டும் தீவிரமாகச்சிந்தித்த கண்ணனுக்கு உடுப்பிட்டியில் உள்ள சோதிப்பிள்ளை மேத்திரியாரின் ஞாபகம் வந்தது. அவர் தன்னை ஓரளவு புரிந்து கொண்டவர். ஆனாலும் அவர் கண்டிப்பு நிறைந்தவர் என்பதும் யோசிக்க வேண்டிய விடயம் ஆம் நேரம் நெருங்க நெருங்க கண்ணனுடைய உள்ளத்தில் ஒருவித பதட்டம். பரபரப்பு, தவிப்பு எல்லாம் ஏற்பட்டுக் கொண்டிருந்தது. இப்பொழுது அவர் கடவுளைத் தவிர வேறு யாரையும் நம்பும் நிலையில் இல்லை ஆகவே கடவுளே நீ தான் துணை என்று நம்பிக்கொண்டார். இப்பொழுது உடுப்பிட்டியிலிருக்கும் சோதிப்பிள்ளை மேத்திரியார் வீட்டை நோக்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணனுடைய துவிச்சக்கரவண்டி சென்று கொண்டிருக்கிறது. ஆம் வல்வெட்டியில் பழைய றஞ்சனா தியேட்டருக்கு அண்மையாக உடுப்பிட்டியை நோக்கி கண்ணன் களைப்புடனும் தவிப்புடனும் சென்று கொண்டிருக்கின்றார். அப்பொழுதுதான் நெஞ்சை உறைய வைக்கும் அந்த அற்புதம் அங்கே அவருக்கு நடந்தேறியது.

**றோட்டில் ஆம்! அவர் போய்க்கொண்டு இருக்கிற நடுறோட்டில் அந்தபொருள், எந்தப்பொருளை பெறவேண்டுமென்று இறைநம்பிக்கையுடன் போய்க்கொண்டிருக்கிறாரோ அதே பொருள், ஆம்! அதே மடத்தல் அதுவும் அதே அளவுநிறையுடைய மடத்தல் ஒன்று அந்த நடுறோட்டில் அநாதரவாக அந்த காலை நேரத்தில் அங்கே கிடக்கிறது.......**


வழியில் எனக்கு பொன் கிடைத்திருக்கலாம் பணம் கிடைத்திருக்கலாம் நான் அவற்றிற்கு ஆசைப்படவில்லை, அவற்றை இறைவனிடம் கேட்கவும் இல்லை ஆனால் எனக்கு அப்பொழுது தேவைப்பட்டது, அந்த மடத்தல்தான். ஆம் அந்த மடத்தலையே எனக்கு இறைவன் வழங்கிவிட்டார். இவ்வாறு அமைதியாக உருக்கமாகக் கூறிய கண்ணன் "மாஸ்ரர் எனக்கு இப்பொழுதும் உடம்பு புல்லரிக்கிறது" எனக்கூறிய கண்ணன் இறைவனது கருணையை நினைத்து கண்கலங்கினார்.

அந்த மடத்தல் யாரோ ஒருவருடைய வாகனத்திலிருந்துதான் விழுந்திருக்கிறது. அதில் ஓயிலும் பிரண்டிருந்தது ஆனால் தேவையான ஆளுக்கு தேவையான நேரத்தில் தேவையான இடத்தில் விழுந்து கிடக்கிறது. இதுதான் இறை கருணை இதுதான் கடவுள் நம்பிக்கை உள்ளவருக்கு கடவுள் கொடுக்கின்ற பரிசு. ஆம்! கல்லுக்குள் இருக்கும் தேரைக்கும் உணவு கொடுக்கும் கடவுள்தான் இங்கே கண்ணனுக்கும் மடத்தலை கொடுத்திருக்கிறார்.

தொழில் தர்மத்தை யாராவது கடைப்பிடித்து நடக்கிறார்களா? எனத்தேடுகின்ற உலகத்தில் இன்று நாம் வாழ்ந்து கொண்டு இருக்கின்றோம். ஆனால் ஒரு சராசரி மனிதனாக வாழ்ந்துகொண்டிருக்கும் கண்ணனிடம் அந்த தொழில் தர்மத்தை யாரும் எப்போதும் எங்கேயும் நிறைவாகவே காணக்கூடிய உயர்ந்த பண்புகள் உள்ளவர் கண்ணன். அதுமட்டுமல்ல தன்னை தொழில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்பாக வளர்த்துக் கொள்ளும் வல்லமையும் அவரிடமிருப்பதை காணமுடிகிறது. வல்வெட்டித்துறை வைத்தியசாலைக்கு நல்ல தண்ணீர் பெறுவது பெரிய பிரச்சினையாக நீண்டகாலம் இருந்து வந்தது. அதில் நல்ல தண்ணீர் கிடைப்பதற்கு சாதாரண மோட்டர் மூலம் 650 அடி தூரத்திலுள்ள கிணற்றிலிருந்து நேரடியாக நீரைப்பெற்று பயன்படுத்த முடியும் என்பதை முதன் முதல் செய்து காட்டிய பெருமையும் அவருக்கு உண்டு.



ஆம் கடமை செய்பவர்களைத்தான் கடவுள் விரும்புகிறார். அவர்களுக்கு அற்புதங்களையும் கூட நிகழ்த்துகிறார். கடமை செய்யாது கடவுளிடம் செல்பவர்களை இவர்கள் வழிபடச் செல்லுகின்ற அந்த கடவுளும் விரும்புவதில்லை. இதனையே எமது சமயம் வலியுறுத்துகின்றது. யோகசுவாமிகளும் இவற்றையே எமக்கெல்லாம் கூறிச் சென்றுள்ளார்.

ஓம் முருகா !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சந்நிதியான் மூன்று

நாம் பயன்படுத்துகின்ற பொருட்கள் அனைத்திற்கும் மூலகாரணமாக இருக்கின்ற இறைவனுக்கு நன்றி தெரிவித்து அவற்றை நாம் நுகர்வதற்கு முன்பு இறைவனுக்கு காணிக்கையாக்கி நுகருகின்ற பழக்கம் அருகி வருவதைக் காண்கின்றோம். ஆனால் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியில் பஸ்நிலையத்திற்கு முன்பாக S. RM. இராமையாச் செட்டியார் அன்சன்ஸ் என்ற பெயரில் வியாபார ஸ்தாபனம் நடாத்தி வரும் இ. முத்துலிங்கம் செட்டியார் குடும்பம் தமது மூதாதையர் காலத்திலிருந்து தமக்கு கிடைக்கின்ற விளைபொருட்களின் ஒரு பகுதியை ஆலயங்களுக்கு காணிக்கையாக வழங்குகின்ற பழக்கத்தை மேற்கொண்டு வருகின்றனர்.

பளைப்பகுதியில் செட்டியார் அவர்களுக்கு தென்னந்தோட்டம் காணப்பட்டாலும் கடந்த காலங்களில் ஏற்பட்ட நாட்டுக்குழப்பம் காரணமாக தென்னந்தோட்டம் அமைந்திருக்கும் பகுதிக்குச் சென்று எந்தவிதமான பயனையும் பெறமுடியாத சூழ்நிலை காணப்பட்டது. ஆனால் 2002 ஆம் ஆண்டு காலப்பகுதில் ஏற்பட்ட சமாதானச் சூழல் காரணமாக அங்கு சென்று புனரமைப்புப் பணிகளில் ஈடுபட்டதுடன் நீண்டகாலத்திற்குப் பின்பு தோட்டத்திலிருந்து கிடைத்த சிறிய அளவு தேங்காய்களையும் வீட்டிற்கு எடுத்து வந்தார். இவற்றில் ஒரு பகுதியை தமது வீட்டுத் தேவைக்கு எடுத்துக் கொண்டு இன்னொரு பகுதியை சில ஆலயங்களுக்கு வழங்குகின்ற நடவடிக்கையை மேற்கொண்ட பொழுது சந்நிதியானுக்கும் 105 தேங்காய்களை வழங்கவதற்கு முடிவு செய்தார். செட்டியார் அவர்கள் ஆச்சிரமத்துடன் மிகுந்த ஈடுபாடு கொண்ட காரணத்தால் அந்தத் தேங்காய்களை சந்நிதியான் ஆச்சிரமத்திற்கு வழங்குவதற்கு தீர்மானித்தார்.

2002 ஆம் ஆண்டு சரஸ்வதி பூசை நடைபெறுகின்ற காலகட்டத்தில் ஆச்சிரமத்தின் சுவாமிகள் யாழ்ப்பாணம் சென்ற சமயம் வழமை போல செட்டியார் கடைக்கும் சென்று அவரிடம் சுகம் விசாரித்தார்கள். அப்பொழுது செட்டியார் அவர்கள் ஆச்சிரமத்திற்கு தேங்காய் வழங்க இருக்கும் செய்தியைக் கூறிய பொழுது சுவாமிகள் தமது வழமையான பாணியில் “நல்லது ஐயா” நான் அடுத்த முறை வரும்பொழுது எடுப்பதாகக் கூறிவிட்டு விடைபெற்றுச் சென்று விட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆச்சிரமத்தின் சுவாமிகள் அடுத்த முறை அன்னதானப் பணிகளுக்கு தேவைப்படும் சாமான்களை கொள்வனவு செய்வதற்காக யாழ்ப்பாணம் சென்ற வேளை செட்டியாரிடமும் சென்று அவரிடமிருந்து தேங்காய்களை எடுப்பது தொடர்பான தகவலையும் தெரிவித்தார். அப்பொழுது செட்டியார் அவர்கள் மிகுந்த மனவருத்தத்துடனும் வேதனையுடனும் தான் வாக்குப்பண்ணிய படி 105 தேங்காய்களை வழங்க முடியாதிருப்பதாகவும் 80 தேங்காய்கள் மட்டுமே தற்பொழுது இருப்பதாகவும் சுவாமிகளிடம் தெரிவித்தார். வேறு கோயில் தேவைகளுக்கும் மற்றும் வீட்டுத் தேவைகளுக்கும் தேவைப்பட்ட பொழுது சந்நிதியான் ஆச்சிரமத்திற்கு ஒதுக்கப்பட்ட தேங்காய்களிலும் கணிசமான அளவை எடுக்க வேண்டி ஏற்பட்டதனால் இவ்வாறான குறைவு ஏற்பட்ட உண்மையை செட்டியார் அவர்கள் சுவாமிகளுக்கு எடுத்துக் கூறினார்.

தேங்காய்களின் எண்ணிக்கையில் குறைவு ஏற்பட்டதனால் ஆச்சிரமத்தின் சுவாமிகள் எந்தவித மனக்கிலேசமும் அடையப்போவதில்லை. அதனால் அவருக்கு எந்தவித மனப்பாதிப்போ கஷ்டமோ ஏற்படப்போவதில்லை என்பது செட்டியாருக்குத் தெரிந்திருந்தாலும் இது சந்நிதியானுடைய காரியம் அதனை முழுமையாக நிறைவேற்ற முடியவில்லை என்ற ஆதங்கத்துடனேயே செட்டியார் அவர்கள் தமது உணர்வை வெளிப்படுத்துவதை நன்கு உணர்ந்துகொண்ட சுவாமிகளும் "அது பரவாயில்லை ஐயா" என்று கூறி ஏனைய சாமான்களை ஏற்றிக்கொண்டு இறுதியாக இங்கே வருவதாகக் கூறி தமது வழமையான வேலைகளுக்காக வேறு இடங்களுக்கு சுவாமிகள் சென்று விட்டார்.

ஆச்சிரமத்தின் சுவாமிகள் சென்று நீண்ட நேரத்தின் பின்பும் செட்டியார் அவர்களுக்கு தேங்காயின் நினைவிலிருந்து மீள முடியவில்லை. முருகா! சந்நிதி வேலா! நான் என்ன செய்வேன் நான் நினைத்தபடி செய்ய முடியாது போய்விட்டதே என்று தன்னை நொந்து கொண்டார். இது என்னுடைய தவறு தானே நான் இதை எப்படி சந்நிதியானிடம் முறையிட முடியும் என்று தனக்குத் தானே சமாதனம் செய்து கொண்டார். என்ன அதிசயம் இவ்வாறு அவர் தனக்குத்தானே சமாதானம் செய்து கொண்டிருந்த அதே வேளை ஒரு தேங்காய் மூடை அவருடைய கடைக்கு வந்து இறங்கிக் கொண்டிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடைக்கு தேங்காய் மூடை வந்து இறங்கிக் கொண்டிருக்கின்ற சம்பவம் நிஜம்தானா என்று செட்டியார் அவர்களுக்கு சந்தேகம் ஏற்பட்டது. தான் காண்பது கனவா அல்லது உண்மையான நிகழ்வு தான் நடக்கின்றதா என்று செட்டியார் அவர்கள் சற்று நிதானமாகச் சிந்தித்து உண்மையான நிகழ்வுதான் இங்கே நடந்துகொண்டிருக்கின்றது என்பதை உணர்ந்து கொண்டார். ஆம்! அது அவருடைய பளைத் தோட்டத்திலிருந்து அவருக்கு அனுப்பப்பட்ட தேங்காய் மூடை அதுமட்டுமல்ல அங்கே மேலும் ஒரு அதிசயம் காத்திருந்தது. ஆம்! அந்த தேங்காய் மூடைக்குள் சரியாக 25 தேங்காய்கள் இருந்தன.

செட்டியாருடைய உள்ளத்தில் ஏற்பட்ட அந்தப் பூரிப்பான உணர்வலைகளை எம்மால் எவ்வாறு விளக்க முடியும். அவர் நினைத்தது போலவே இப்பொழுது 105 தேங்காய்களை வழங்குவதற்கு ஆயத்தமாக செட்டியார் சுவாமிகளுடைய வரவை மகிழ்வுடன் எதிர்பார்த்து ஆவலுடன் காத்திருந்தார். சுவாமிகளும் வந்து சேர்ந்தார். நடந்த அதிசயத்தை எடுத்துக் கூறினார். இந்தத் தேங்காய் மூடை நேற்று வந்திருக்கலாம் அல்லது நாளை வந்திருக்கலாம் இன்று வந்துள்ளது. அது மட்டுமல்ல சரியான நேரத்திலும் சரியான எண்ணிக்கையுடனும் வந்து கிடைத்துள்ளது. இவ்வாறு கிடைப்பதற்கு அருள் புரிந்த சந்நிதியானின் திருவிளையாடலை செட்டியார் அவர்கள் சுவாமிகளுக்கு உள்ளம் உருகி எடுத்துக் கூறினார். இவ்வாறு உடலாலும் உள்ளத்தாலும் தனது உணர்வலைகளை வெளிப்படுத்தியவாறு 105 தேங்காய்களையும் பூரண திருப்தியுடன் செட்டியார் ஆச்சிரமத்துக்கு கையளித்தார்.

இங்கே நடந்தேறிய நிகழ்வுகள் எல்லாம் சாதாரண நிகழ்வுகள் அல்ல, இங்கே இடம்பெறுகின்ற இந்த அசாதாரண நிகழ்வுகள் ஆன்மீக நம்பிக்கையுள்ளவர்களால் தான் விளங்கிக் கொள்ளக் கூடியவை. அது மட்டுமல்ல அவர்களுக்காகத்தான் இது போன்ற நிகழ்வுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன எனவும் கூறலாம். ஆம் சந்நிதியானுக்கு வழங்க வேண்டும் என்ற நல்ல உள்ளம் தான் முக்கியமானது. அந்தச்சிந்தனை இருந்தால் செயற்பாடு தானாகவே நடக்கும் என்பதற்கு இது ஒரு சிறு உதாரணமாகும்.

இவ்வாறான அற்புதமான உணர்வுகளுடன் அன்பர்கள் சந்நிதியான் ஆச்சிரமத்திற்கு வழங்குகின்ற பணத்தையோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருளையோ அன்றாட அன்னதானப் பணிகளுக்கு பயன்படுத்துவதுதான் ஆச்சிரமத்தின் பிரதான செயற்பாடாக இடம்பெற்று வருகிறது. அதில் மீதப்படுகின்றவற்றை மக்களின் துயர் துடைக்கின்ற பல்வேறு தர்மப்பணிகளுக்கும் சுவாமிகள் பயன்படுத்தி வருகின்றார்கள். இங்கே நடைபெறுகின்ற பணிகள் யாவும் இறைபணிகளாகும் இதில் செயற்பட்டுக் கொண்டிருக்கின்ற அனைவரும் கருவிகளே தவிர காரணமானவன் சந்நிதியானே.

அவன் புகழ்பாடி அவன் பாதங்கள் பணிந்து அவன் அருள் பெறுவோமாக.

ஓம்! முருகா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்நிதியான் நான்கு

சந்நிதியான் காக்கும் கடவுளான கருணை மழை பொழிகின்ற கலியுகத் தெய்வம். இதே போன்று அருளாளர்களும் எப்பொழுதும் பிறருக்காக வாழ்ந்து வருகின்றனர். இவற்றை விளக்குகின்ற ஒரு சம்பவத்தை அடியார்களுடன் பகிர்ந்து கொள்ளுகின்றோம்.

சிதைவடைந்திருந்த ஸ்ரீசெல்வச்சந்நிதி ஆலயத்தை புனரமைத்து 1987 ஆம் ஆண்டு மீண்டும் நித்திய பூசை ஆரம்பிப்பதில் பெரும் பங்காற்றியவர் இறைபதம் அடைந்த முருகேசு சுவாமிகளாவர். இவ்வாறு சந்நிதி ஆலயத்தின் புனரமைப்பு வேலைகளை செய்து முடித்த முருகேசு சுவாமிகள் சில ஆண்டுகளின் பின் ஆலயத்தின் பிரமாண்டமான முன் மண்டபத்தின் தூண்கள் ஆங்காங்கே உடைவடைந்து இருப்பதை அவதானித்து அதனையும் செப்பனிடுவதற்கு திருவுள்ளம் கொண்டார். இதனால் அந்தத் தூண்களில் சிதைவுற்றுள்ள மேற்படையைச் செதுக்கி அந்த இடங்களுக்குச் சீமேந்து பூசி செப்பனிடுவதே பொருத்தமானது எனவும் முடிவு செய்யப்பட்டு அதற்கான வேலைகளும் 1994ஆம் ஆண்டு நடுப்பகுதி அளவில் ஆரம்பிக்கப்பட்டன.

வேலையின் முதற்கட்டமாக சிதைவடைந்திருந்த பகுதிகளை தூண்களில் இனம் கண்டு தொழிலாளர்கள் அவற்றை சீமேந்து இடுவதற்கு வசதியாக செதுக்குகின்ற செயற்பாட்டை ஆரம்பித்து விட்டனர். ஆனால் அவர்கள் மேற்கொள்ளுகின்ற அந்தச் செயற்பாடு விபரீதமாக முடிவடையப் போவதை அப்பொழுது எவருமே உணரவில்லை. மிகவும் பழமைவாய்ந்த பிரமாண்டமான தூண்களையும், மிக உயரமான கோப்பிசத்தையும் உடைய அந்த மண்டபத்தின் தூண்கள் தனிச் சுண்ணாம்பினாலேயே அமைக்கப்பட்டிருந்ததினால் அவற்றின் பாவனைக் காலம் முடிவடைந்து கோப்பிசத்தைத் தாங்கும் சக்தியை இழந்திருந்தது. இந்நிலையில் தூண்களில் செய்த செதுக்கல் வேலையால் திடீரென கோப்பிசம் முழுவதும் குடை சாய்கின்ற விபரீத நிகழ்வு அங்கே அரங்கேறியது. இதனால் அங்கே மிகப் பெரிய ஆபத்தான சூழ்நிலை உருவாகியது.

இவ்வாறு மண்டபம் விழுவதை நேரடியாகப் பார்த்துக்கொண்டிருந்தவர்களும் விழுகின்ற சத்தத்தைக் கேட்டவர்களும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றும் சம்பவத்தைக் கேள்விப்பட்டவர்களும் பதை பதைப்புடனும் அவலக் குரல்களை எழுப்பியவாறும் அங்கே ஓடிச்சென்றனர். வேலை செய்துகொண்டிருந்தவர்கள் ஆலயத்தில் வழிபட்டுக் கொண்டிருந்தவர்கள், வழமையாக மண்டபத்தினுள் தங்கி ஓய்வெடுத்துக் கொள்பவர்கள் என பலவகைப்பட்டவர்களும் ஒரே நேரத்தில் ஒன்றுகூடுகின்ற மண்டபமாக முகப்பு மண்டபம் விளங்குகின்றமையால் அதற்குள்யார் யார் அகப்பட்டிருப்பார்களோ என்ற அச்சத்தால் குறுகிய நேரத்திற்குள் அங்கே பெரும் தொகை மக்கள் ஒன்று கூடி விட்டனர். இவ்வாறு ஒன்றுகூடிய அனைவரும் இடிந்து விழுந்த கோப்பிசத்தின் உட்பகுதியினுள் மிகவும் கஷ்டப்பட்டு தேடும் முயற்சியில் ஈடுபட்டனர்.

அப்பொழுது வேலைசெய்து கொண்டிருந்தவர்களைப் பற்றிய கவலை அதிகமானவர்களுக்கு ஏற்பட்டதனால் அவர்களைப் பற்றி ஆராய்ந்த பொழுது முதற் தூண் இடிந்துவிழுகின்ற சமயத்தில் அதன் அருகில் நின்று வேலை செய்துகொண்டிருந்தவர் தூண் இடிந்து விழ ஆரம்பித்த பொழுது தானும் ஏனைய தொழிலாளர்களும் விரைவாக அங்கிருந்து வெளியே வந்ததையும் தங்களில் எவருக்கும் எந்தப் பாதிப்பும் ஏற்படவில்லை என்பதையும் வெளிப்படுத்தினார்கள். அதே போன்று ஆலயத்தில் வழிபட்டுக் கொண்டிருந்தவர்கள் மண்டபத்தினுள் ஓய்வெடுத்துக் கொண்டிருந்தவர்கள் என ஒவ்வொரு பகுதியினரும் தாங்களும் தெய்வாதீனமாக எந்தவிதமான பாதிப்புக்களும் இல்லாது தப்பித்துக் கொண்டமையை வெளிப்படுத்தினார்கள். அதே நேரம் மண்டபம் இடிந்து விழுகின்ற நேரத்தில் மண்டபத்தினுள் 5 வயது மதிக்கத்தக்க குழந்தை ஒன்று விளையாடிக் கொண்டிருந்ததை அனைவரும் பார்த்திருந்ததையும் தற்பொழுது அந்தக் குழந்தையை வெளியே காணவில்லை என்பதையும் எல்லோரும் உறுதிப்படுத்திக் கொண்டனர். இந்த நிலையில் அங்கே ஏற்பட்டுள்ள விபரீதத்தை எல்லோரும் உணர்ந்து கொண்டனர்.

எல்லோருடைய முகத்திலும் பயமும் சோகமும் ஏற்படத் தொடங்கியது. ஆனாலும் ஒரு சிலர் மிகத்துரிதமாகச் செயற்பட்டனர். அக்குழந்தை விளையாடிக் கொண்டிருந்த இடம் எனக் கருதப்பட்ட இடத்தை நன்கு உறுதிப்படுத்தி அந்த இடத்தை நாடிச் சென்று தரையில் சாய்ந்திருந்த கோப்பிசத்தை கவனமாக ஆராய்ந்து பார்த்தனர். என்ன அதிசயம் அந்தக் குழந்தையின் தலையில் இருந்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரியாக ஒரு அங்குல உயரத்தில் கோப்பிசம் தடைப்பட்டு நிற்பதையும் பேயறைந்த நிலை என்று குறிப்பிடுவது போல எதுவுமே பேசமுடியாத நிலையில் அந்தக் குழந்தை காணப்பட்டதையும் கண்டு கொண்டவர்கள் உடனடியாகவே பாதுகாப்பான முறையில் குழந்தையை மீட்டு எடுத்தனர். அந்தக் குழந்தைக்கும் எந்தவித காயமோ ஆபத்தோ ஏற்படாததைக் கண்ட அனைவரும் உணர்ச்சி மேலீட்டால் சந்நிதி முருகா! ஆற்றங்கரை வேலா! கலியுகக்கந்தா! என முருக நாமங்களை உச்சரித்த வண்ணம் ஆனந்தப் பரவசத்தில் மூழ்கிப்போயினர் இன்னும் சிலர் சந்நிதியானுடைய கருணையின் தனித்துவத்தை தமக்கிடையே உணர்வுபூர்வமாக பரிமாறி ஆனந்தக் கண்ணீர் சொரியலாயினர்.



முருகேசு சுவாமிகள் திருத்தவேலை செய்து கொண்டிருந்த பொழுது காணப்பட்ட ஆலயத்தின் பழைய முகப்பு மண்டபம்.

அப்பொழுது அங்கே பிரசன்னமாக இருந்த ஆலயத்திருப்பணிச் சபையினர் ஆ. அருணாசலம் அவர்கள், கோயிற் பூசகர்கள், தரிசிக்க வந்த அடியார்கள் என அனைவரும் கூட்டம் கூட்டமாக நின்று தங்களுக்கிடையே பின்வருமாறு உணர்வுகளைப் பரிமாறிக் கொண்டனர். யாழ்ப்பாணத்திலிருந்து தனியார் பஸ்மூலம் ஆலயத்தைத் தரிசிக்க வந்த பாடசாலை மாணவர்கள் ஆலயத்தின் உள் மண்டபம் வெளிமண்டபம் என்பவற்றில் பெருந்தொகையான அளவில் வழிபட்டபின் திரும்பிச் சென்று சில நிமிடங்களே சென்றுள்ளன. அவர்கள் சென்ற பின்பே இந்நிகழ்வு இடம்பெற்ற அதிசயத்தை ஒரு பகுதியினர் எடுத்து விபரித்து அவர்கள் காப்பாற்றப்பட்ட அதிசயத்தை வியப்புடன் எடுத்துக்கூறினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னும் சிலர் இவ்வாறான திருத்த வேலைகளைச் செய்யாது விட்டிருந்தால் பூசை நடைபெற்றுக் கொண்டிருக்கும் பொழுதோ அல்லது உற்சவகாலத்திலோ இது தானாக விழுந்திருந்தால் எவ்வளவு அடியார்களின் உயிர்கள் காவு கொள்ளப்பட்டிருக்கும் எனவும் பேசிக் கொண்டனர். மண்டபத்தின் திருப்பணியை முருகேசு சுவாமிகள் மூலம் ஆரம்பிக்க வைத்து தானாக இடிந்து விழவேண்டிய கட்டடத்தை திருப்பணி என்ற செயற்பாட்டின் பெயரால் இடிந்து விழச் செய்து எந்தவித ஆபத்தோ பாதிப்போ ஏற்படாது சந்நிதியான் நிகழ்த்திய திருவிளையாடல் தான் இது என முருகேசு சுவாமிகளுடன் மிக நெருக்கமாக பழகுகின்றவர்கள் தமக்கிடையே பேசிக் கொண்டனர்.

மண்டபம் குடைசாய்ந்த விதத்தினை அங்கு வேலையில் ஈடுபட்ட தொழிலாளர் ஒருவர் விபரிக்கும் பொழுது "நாம் பாரமான பொருளை மேலிருந்து இறக்கும் பொழுது எவ்வளவு கவனமாகவும் செங்குத்தாகவும் இறக்குகின்றோமோ அதே போல அந்த மண்டபத்தின் கோப்பிசமும் சிறிது சிறிதா கீழே இறங்கியது தமக்கு அதிசய காட்சியாகவே இருந்தது" என வியப்புடன் குறிப்பிட்டார். முருகேசு சுவாமிகள் சந்நிதியானுடைய திருப்பணிவேலைகள் சந்நிதியானுடைய பூசை செயற்பாடுகள், சந்நிதி ஆலயச்சூழலின் அன்னதானச் செயற்பாடு என அனைத்து செயற்பாடுகளுக்காககவும் தன்னை முழுமையாக அர்ப்பணித்த தன்னிகரில்லாத அருளாளர்.

1987ஆம் ஆண்டு காலகட்டத்தில் சந்நிதியில் மோசமான இராணுவச் செயற்பாடு காரணமாக நித்திய பூசை தடைப்பட்டிருந்த காலகட்டத்தில் முருகேசு சுவாமிகள் தான் சோறு உண்பதைக் கைவிட்டது மட்டுமன்றி மீண்டும் நித்திய பூசை ஆரம்பிக்கும் வரை அந்த விரதத்தை இறுக்கமாகக் கடைப்பிடித்த அருளாளர். அப்படிப்பட்ட அருளாளரால் ஆரம்பிக்கப்பட்ட ஆலயத்திருப்பணியால் அதுவும் ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தில் அடியார்களுக்கு ஆபத்து ஏற்பட முடியுமா? அது மட்டுமா இவ்வாறு திருத்த வேலை என ஆரம்பிக்கப்பட்ட வெளிமண்டபம் இன்று நாம் காணுகின்ற புதுப்பொலிவுடன் புதிய அமைப்புடன் புதிதாகக் காட்சி தந்துகொண்டிருக்கின்றது. இதற்கு காரணமானவர் முருகேசு சுவாமிகள் அல்லவா!

ஓம் முருகா!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்நிதியான் ஐந்து

உண்மையான இறைநம்பிக்கை உள்ளவர்கள், உண்மையான இறைதொண்டும் செய்பவர்கள் எல்லோரும் இறைவனால் இரட்சிக்கப்படுகிறார்கள் என்பது மட்டுமன்றி இவ்வாறு இறைவனால் இரட்சிக்கப்பட்ட பலர் இவ்வுலகில் அருளாளர்களாகவும் வாழ்ந்து வருகின்றனர். ஆனாலும் இவைகள் எல்லாம் உண்மையாகவே நடைபெறுகின்றனவா இவற்றை எல்லாம் நாம் அனுபவரீதியாக வாழ்க்கையில் தற்பொழுது உணர்ந்து கொள்ள முடியுமா என்பன போன்ற சந்தேகங்களும் பல பேர் மத்தியில் நிலவுவதையும் நாம் காண முடிகின்றது.

வாழ்க்கையின் உண்மையான நோக்கங்கள், செயற்பாடுகளிலிருந்து விலகி மனித சமுதாயம் சீர் கெட்டுப்போய்க் கொண்டிருக்கும் இந்த காலகட்டத்தில் இவ்விதமான சந்தேகங்கள் ஏற்படுவது இயல்பானதே. இருந்த போதும் இறை நம்பிக்கை சார்ந்த செயற்பாடுகளும் எமது கண் முன்னால் நடைபெற்றுக் கொண்டுதான் இருக்கின்றன என்பதற்கு முருகேசு சுவாமிகளின் இறுதிக் காலத்தில் இடம்பெற்ற சில சம்பவங்களையும், சுவாமி சமாதி அடையும் பொழுது அவருடன் கூட இருந்தவருடைய வாழ்க்கைப் பயணத்தில் இடம்பெற்றுக் கொண்டிருந்த சம்பவங்களையும் அடியார்களுடன் பகிர்ந்து கொள்கின்றோம்.

முருகேசு சுவாமிகள் சந்நிதியானுடைய அருட்கடாட்சத்தைப் பெற்று சந்நிதியில் வாழ்ந்த அருளாளர். அவருடைய குருபூசை தினம் வருடா வருடம் கொண்டாடப்பட்டு வருகின்றது. சுவாமிகளுடன் பழகியவர்கள், மற்றும் அவருடைய வழிகாட்டலால் ஆன்மீக ஈடுபாடு கொண்டவர்கள் என இன்று உலகின் பல பாகங்களிலும் வாழ்ந்து கொண்டிருப்போர் ஏராளம். அவர்களில் சுவாமிகளின் இறுதிக்காலம் வரை அவருக்கு பணிவிடை செய்து அவர் சமாதியடையும் பொழுது அவருடன் கூட இருந்தவர் திரு. ஆ . அருணாசலம் அவர்களாவார். இவர் சந்நிதிச்சூழலில் வாழ்ந்துகொண்டிருக்கின்றார். அதாவது சந்நிதி ஆலயத்தின் பிரதான வாசலை நோக்கி வருகின்ற சந்நிதி கிழக்கு வீதி என்ற வீதியில் குடியிருக்கின்றார். 1996 ஆம் ஆண்டு இவரது மனைவி இறந்த பின் தனியாக வாழ்ந்து வந்ததுடன் முருகேசு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவாமிகளுடன் மிக நெருக்கமான முறையில் பழகும் அன்பராகவும் விளங்கியவர்.

1995ஆம் ஆண்டு காலகட்டத்தில் சந்நிதியான் ஆலயச்சூழலில் கடுமையான வன் செயல்கள் இடம்பெற்று உடைவுகளும் அழிவுகளும் ஏற்பட்டது. இக்காலகட்டத்தில் தான் பிறந்த ஊரான பருத்தித்துறையில் தங்கியிருந்த திரு அருணாசலம் அவர்கள் சந்நிதிக்கு வந்து தனது வீட்டைப் பார்வையிட்ட பொழுது வீட்டின் முழுப்பகுதியும் ஆங்காங்கே சிதைவடைந்திருப்பதைப் பார்த்து இவற்றையெல்லாம் திருத்தியமைப்பது முடியாதகாரியமென்பதை உணர்ந்து மீண்டும் பருத்தித்துறைக்கே சென்று குடியிருக்க முடிவு செய்தார். இந்த நிலையில் முருகேசு சுவாமிகளும் சிதைவடைந்த அருணாசலம் அவர்களின் வீட்டைப் பார்வையிட வந்தார்கள். அவர் அருணாசலம் அவர்கள் முடிவு செய்ததற்கு மாறாக வீட்டைத் திருத்தலாம் என்று கூறியது மட்டுமன்றி வீட்டின் ஒருபகுதியைத் திருத்துகின்ற வேலையைச் செயற்படுத்தி முடித்து இருவரும் அங்கேயே குடியிருக்கத் தொடங்கினர்.

வசதி குறைவான இடத்தில் சுவாமிகள் குடியிருப்பது அருணாசலம் அவர்களுக்கு மிகுந்த கவலை அளித்தாலும் அங்கேயே குடியிருக்க விரும்பிய சுவாமிகளின் விருப்பத்திற்கு மாறாக நடக்கக்கூடாதென்பதனால் மழைகாலத்தில் எதிர்நோக்கிய ஒழுக்குகள் மற்றும், தரையில் மண்டபத்தில் நீர் தேங்கி நிற்கும் நிலமைகள் மத்தியிலும் அங்கேயே குடியிருக்கலானார்கள் இந்தச் சந்தர்ப்பத்தில் கிபீர் விமானக் குண்டுவீச்சினால் அடியார் மடம் முற்றாக சேதமடைந்ததுடன் அதன் அருகில் இருந்த அருணாசலம் அவர்களின் வீட்டுக்கும் சேதங்கள் ஏற்பட்டன. இந்த விமானத் தாக்குதலே வடமராட்சியில் இடம்பெற்ற இறுதி விமானத் தாக்குதல் என்பதும் குறிப்பிடத்தக்கது.

முருகேசு சுவாமிகள் இன்னொருவரின் உதவியுடனேயே செயற்படக்கூடிய நிலையில் இருந்தமையால் அருணாசலம் அவர்கள் முழுநேரமும் சுவாமிகளுடன் தங்கியிருந்து அவருக்கு உரிய பணி விடைகளை மேற்கொண்டு வந்தார். அதுமட்டுமல்ல சுவாமிகளுடன் ஈடுபாடு கொண்ட இன்னும் இரு அன்பர்களான கைதடியைச் சேர்ந்த திரு. பத்மநாதனும் வதிரியைச் சேர்ந்த திரு பொன்னம்பலம் ஆகிய இருவரும் சுவாமிகளுக்குத் துணையாக அருணாசலம் வீட்டிலேயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்கியிருந்து வேண்டிய உதவிகளைச் செய்து வந்தனர்.

குறிப்பிட்ட அந்த நாள் அதாவது 16 - 03 - 1997 மேற் குறிப்பிட்ட இருவரும் தமக்குள்ள சிறிய வேலைகளை முடித்துவிட்டு மறுநாள் மீண்டும் திரும்புவதாக கூறி தமது வீடுகளுக்கு தாமாகவே சென்று விட்டனர். சுவாமிகளும் அருணாசலம் அவர்களும் மட்டுமே வீட்டில் தங்கியிருந்தனர். இரவு 11. 30 மணியளவில் சுவாமிகள் அருணாசலம் அவர்களை எழுப்பி தனக்கு பிஸ்கட்டும் தேனீரும் தரும்படி கேட்டு அவற்றை வாங்கி நிறைவுடன் அருந்தினார் ஆம் கிருஸ்துவின் கடைசி இராப்போசனம் போல் இதுவும் தனது கடைசி இராப்போசனமே என்பதை சுவாமிகள் நன்கே அறிந்திருந்தார். ஆனால் இவ்வாறான புனிதமான போசனத்தை வழங்கிய அருணாசலத்திற்கு அப்பொழுது அது தெரிந்திருக்கவில்லை. பின் தனது கழுத்தில் இருந்த ஒரு உருத்திராக்க மாலையைக் கழற்றி அதை மல்லாவியைச் சேர்ந்த நாகேந்திரம் ஈசனிடம் கொடுக்குமாறு கூறி எந்த வித சனனமுமின்றி அதை அருணாசலத்திடம் வழங்கினார். அதேபோன்று எந்தவித வித்தியாசமுமின்றி இயல்பாக நித்திரைக்குச் செல்வது போல மீண்டும் படுக்கையில் படுத்துக் கொண்டார் சிறிது நேரத்தில் சுவாமிகள் சமாதி நிலை அடைந்திருப்பதைக் கண்டு அருணாசலம் அவர்கள் பதைபதைப்பும் கலக்கமும் அடைந்தார்.

அப்பொழுதான் நன்கு ஆழமாகச் சிந்தித்துப் பார்த்த அருணாசலம் அவர்கள் சுவாமிகள் எங்கே எப்பொழுது யாருடன் இருக்கும் பொழுது தான் சமாதி அடைவேன் என்பதை நன்கு அறிந்தவராகவும் அதற்கு ஏற்ற வகையிலேயே அவருடைய செயற்பாடுகள் அனைத்தும் நீண்டகாலத்திற்கு முன்பிருந்தே இடம்பெற்று வந்ததையும் நன்கு விளங்கிக் கொண்டார்.

சந்நிதி ஆலயச்சூழலிலே தான் சமாதியடைந்து சந்நிதிச்சூழலில் உள்ள வெல்லங்கிராய் மயானத்திலேயே தான் அடக்கம் செய்யப்பட வேண்டும் என்பதனால்தான் வசதிக் குறைவுகள் இருந்தும் தனது வீட்டினை சுவாமிகள் இருப்பிடமாக்கிக் கொண்டதையும், ஏற்கனவே சுவாமிகள் குறிப்பிட்டது போன்று ஞாயிற்றுக்கிழமையே தன்னை முருகன் கூட்டிச் செல்வார் என்பதற்கிணங்க ஞாயிற்றுக்கிழமையே அவர் சமாதியடைந்திருப்பதை உணர்ந்து கொண்டார்கள். அதுமட்டுமன்றி சமாதி அடைவதற்கு சிறிது நேரத்திற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்புதான் தான் கழுத்தில் அணிந்திருந்த உருத்திராக்க மாலையை கழற்றி தன்னிடம் தந்ததன் மூலம் தனது இறுதி நேரத்தையும் சுவாமிகள் சரியாகவே உணர்ந்திருந்ததையும் அருணாசலம் அவர்கள் மீட்டுப்பார்த்த பொழுது அவரை அறியாமலே அவரது கண்கள் குளமாகியது. இவ்வாறு பக்குவப்பட்ட சுவாமிகளுடன் கடைசி நேரம் வரை தான் இருந்தது தனது பாக்கியமே எனவும் உள்ளம் உருகினார்கள்.



ஆம்! இப்பொழுதும் சந்நிதியில் அருளாளர்கள் இலைமறை காயாக வாழ்ந்துகொண்டுதான் இருக்கின்றார்கள்.

ஓம் முருகா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்நிதியான் ஆறு

தம்பி! நாளைக்கு கொழும்புக்குப் போவோம் ஆயத்தங்களைச் செய்!

இவ்வாறு கூறுவதைக் கேட்ட இளைஞன் திடுக்கிட்டான் காரணம் இவ்வாறான ஒரு பயணத்தை இவ்வளவு விரைவாக அவன் எதிர்பார்க்கவில்லை. இரண்டாவதாக அவனிடம் இருப்பதோ பழுதடைந்த காலவதியான பாஸ் இதைக் காட்டி எவ்வாறு ஈழப்பகுதியைக் கடப்பது. சரி தாண்டிக்குளத்தைத் தாண்டி விட்டோம் என ஒரு கதைக்கு எடுத்துக் கொண்டாலும் இளம் வயதும் வாட்டசாட்டமான உருவமும் உடைய நான் ஸ்ரீலங்காப்பகுதிக்கூடாக பாதுகாப்பாகப் பிரயாணம் செய்து கொழும்பைச் சென்றடைய முடியுமா? கொழும்பைச் சென்றடைந்த பின் அங்கே பாதுகாப்புப் படையினரிடம் அகப்படாமல் தங்கியிருந்து வெளிநாடு போகமுடியுமா? இவை எல்லாம் நடக்கக்கூடிய காரியங்களா? என தனக்குள் பல கேள்விகளை எழுப்பத் தொடங்கினான்.

மேற்படி சம்பவம் இரு தசாப்தத்திற்கு முன்பு யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றிருக்க வேண்டும் என்பதை வாசகர்கள் உணரமுடியும் கொழும்புக்கு வெளிக்கிடச் சொன்னவர் முருகேசு சுவாமிகள். சுவாமிகள் சொன்னதைக் கேட்டு அக்கால யதார்த்த நிலையைப் பற்றி சிந்தித்துக் கலக்கமடைந்தவர் சிறுப்பிட்டி ஊரைச்சேர்ந்த கந்தையா சீலன் என்னும் இளைஞனாவான்.

ஆம்! அடுத்தநாள் வேறு வழியின்றி மனக்கலக்கத்துடன் முருகேசு சுவாமிகளுடன் பிரயாணத்தை ஆரம்பித்தான் அந்த இளைஞன். அதே நேரம் இவ்வாறு பிரச்சனைகள் நிறைந்த காலத்தில் பிரச்சனையான ஆவணங்களுடன் சென்று நான் மட்டுமன்றி சாமியாரும் சேர்ந்து சிறையில் அடைபடப் போகின்றோம் என்ற கவலையும் அவனை வாட்டியது. ஆனாலும் முருகேசு சுவாமிகள் திட்டமிட்டபடி பிரயாணம் தொடர்ந்தது. எதிர்பாராத விதமாக இடையில் இயக்கம் சார்பான அன்பர் ஒருவரும் இவர்களுடன் பிரயாணத்தில் இணைந்து கொண்டார். இந்த அன்பர் இவர்களுடன் கூடச் சென்ற காரணத்தால் போராளிகள் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் "பாஸ்" பிரச்சனையால் தடைகள் ஏதும் ஏற்படவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு ஈழப்பகுதியைத் தாண்டி தாண்டிக்குளத்தில் நீண்ட வரிசையில் இராணுவச் சோதனைக்காக இவர்கள் காத்து நிற்கின்றனர் அப்பொழுது இவர்களை நோக்கி ஓர் இராணுவ அதிகாரி வந்துகொண்டிருந்தார். அவ்வாறு வந்த இராணுவ அதிகாரி வரிசையில் நின்ற முருகேசு சுவாமிகளை வரிசையில் இருந்து விலத்தி விசேட மரியாதைகளுடன் தனியே கூட்டிச்செல்ல முற்பட்டார் அப்பொழுது சுவாமிகள் தன்னுடன் உதவிக்கு வந்தவர் என்று தான் கூட்டிச் சென்ற இளைஞனைச் சுட்டிக்காட்டி கூறியதற்கிணங்க சுவாமிகளையும், இளைஞனையும் அந்த இராணுவ அதிகாரி கூட்டிச் சென்றார். அதுமட்டுமன்றி கூட்டிச்சென்று எந்தவித சோதனையுமின்றி கொழும்பு செல்வதற்கான வாகனத்தில் அந்த இராணுவ அதிகாரி இவர்களை ஏற்றி வழி அனுப்பி வைத்தார்.

அவ்வாறு கூட்டிச்சென்று வழியனுப்பி வைத்த இராணுவ அதிகாரி முருகேசு சுவாமிகள் அனுராதபுரத்தில் தொழில் நிமித்தம் வாழ்ந்து கொண்டிருந்த பொழுது சுவாமிகளிடம் வந்து சாத்திரம் கேட்ட ஓர் அன்பர் என்பதை அந்த இராணுவ வீரர் மூலம் சுவாமிகள் அப்பொழுது அறிந்து கொண்டார்கள். ஆம்! இவை எல்லாம் சுவாமிகள் இவ்வுலகில் வாழ்ந்துகொண்டிருந்த வேளை இடம்பெற்ற சில அற்புதமான சம்பவங்களாகும். அதுமட்டுமல்ல சுவாமிகள் சமாதியடைந்த நிலையிலும் கூட அவரது அன்பிற்கும் அரவணைப்பிற்கும் உட்பட்டவர்களுக்குத் தோன்றாத் துணையாக இருந்து முருகேசு சுவாமிகள் குருவருளை வழங்கி வருகின்றார் என்பதற்கு உதாரணமாக இன்றும் பல சம்பவங்கள் பலஅடியவர்களுக்கு நடந்த வண்ணமே இருக்கின்றன.

இந்தவகையில் சுவாமிகளுடன் இறுதிக்காலம் வரை மட்டுமல்ல இறுதி நிமிடம் வரை இருந்து அவருக்குப் பணிவிடை செய்து அவரின் ஆசிர்வாதத்தைப் பெற்ற அவரின் வழிகாட்டல்களைப் பின்பற்றிக் கொண்டிருக்கும் திரு. ஆ. அருணாசலம் அவர்களின் வாழ்க்கைப் பயணத்தையும் ஓர் உதாரணமாக் காட்டலாம். சுவாமிகள் சமாதி அடைந்த காலகட்டத்தில் திரு. ஆ. அருணாசலம் அவர்களுக்கு வயது 59 அவருக்குப் பிள்ளைகள் இல்லை. அதுமட்டுமல்ல அவரின் மனைவியும் 1996ஆம் ஆண்டு இறைபதம் அடைந்த நிலையில் அவர் தனியாக வாழ்ந்து கொண்டிருந்தார்கள் எனவே ஒரு சராசரி மனிதனைப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போன்று திரு. அருணாசலம் அவர்களும் நான் இவ்வாறே தனியாக வாழ்ந்து எனது வாழ்க்கைப் பயணத்தை நிறைவு செய்வேன் என்ற சிந்தனையுடன் வாழ்ந்து கொண்டிருந்தார்.

ஆனால் சுவாமிகள் சமாதி அடைந்து சில காலத்தில், சுவாமிகளுக்கு மிகவும் நெருக்கமாக இருந்து அவரின் இறுதிக்காலம் வரை அவருக்குத் தொண்டுகள் செய்த ஒரு குடும்பத்தில் உள்ள பெண்ணை மறுமணம் செய்தது மட்டுமன்றி தற்பொழுது மூன்று பிள்ளைகளுக்குத் தந்தை என்ற ஸ்தானத்திலும் காணப்படுகின்றார். ஆம்! அவருடைய வாழ்க்கையில் மீண்டும் ஒரு மறுமலர்ச்சி ஏற்பட்டு நறுமணம் வீசும் புதிய வாழ்க்கைப் பயணத்தில் சென்று கொண்டிருப்பதை காணமுடிகிறது. இந்த வயதில் இவருக்கு இவ்வாறான சிறப்பான குடும்ப வாழ்க்கை அமைந்திருக்கின்றதே என்று மற்றவர்கள் கூறுமளவிற்கு திருப்தியான வாழ்க்கையை மன நிறைவுடன் வாழ்ந்து கொண்டிருக்கின்றார். அருளாளர்களுடைய ஆசிர்வாதம் அவர்கள் வாழும் பொழுது மட்டுமல்ல சமாதி அடைந்த பின்பும் பலரது வாழ்க்கையில் தொடர்ந்து கொண்டே இருக்கிறது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு. ஆ. அருணாசலம் அவர்களுடன் சுவாமிகள் தொடர்பாக அடியேன் பலமுறை உரையாடியுள்ளேன். முருகேசு சுவாமிகளின் தொடர்பால் அவரின் அன்பையும் அரவணைப்பையும் பெற்று அவரின் ஆசிர்வாதத்திற்கு உட்பட்டவர்கள் ஏராளம். அதேபோன்று அவரின் ஆசிர்வாதத்தால் அடியவர்கள் இவ்வுலகில் பெற்ற சிறப்புக்களையும் அளவிட்டுக் கூறமுடியாதென அடியேனிடம் உணர்வு பூர்வமமாக எடுத்துக் கூறுவார்கள். ஆனாலும் இவை எல்லாவற்றையும் விட சுவாமிகள் எங்களை எல்லாம் ஆன்மீகப் பாதையில் ஆற்றுப்படுத்திய சம்பவங்களும் அதனால் அந்தப் பாதையில் நாங்கள் இன்றும் சென்றுகொண்டிருப்பதும்தான் எமக்குக் கிடைத்த மிகப்பெரிய பேறு என்பதை விளக்கமாக அதே நேரம் மிகவும் அடக்கமாக அருணாசலம் குறிப்பிட்டார்.

ஆம்! ஆற்றங்கரை வேலவனது பாதங்களைப் பணிவதும் அவனது அருட்கடாட்சத்திற்கு ஆட்படுவதும் அதனால் உருவாகும் திருவிளையாடலுக்கு உட்படுவதைப் போன்ற மனநிறைவு வாழ்க்கையில் வேறு எவற்றிலாவது எமக்கு ஏற்பட முடியுமா?

ஓம் முருகா!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்நிதியான் ஏழு

அன்பே சிவம்! இன்பமே சூழ்க! எல்லோரும் வாழ்க! என்ற பன்மைக் கருத்துள்ள பொதுச்சிந்தனையுள்ள நல்ல கருத்துக்களை எமது சமயம் கொண்டிருப்பது நமக்கெல்லாம் சிறப்பையும் பெருமையையும் தரும் விடங்களாகும். இத்தகைய பரந்த நல்ல கருத்துக்களை சமய ரீதியான வாழ்க்கைச் செயற்பாட்டிலும் எமது முன்னோர்கள் இவற்றைக் கடைப்பிடித்து வாழ்ந்து வந்துள்ளனர் அதாவது சமூகத்தில் இவ்வாறான பண்புகளைக் கடைப்பிடித்து வாழ்க்கை நடத்துகின்ற மக்கள் கூட்டத்தினர் கணிசமாக காணப்பட்டுள்ளனர். கடந்த தலைமுறையில் கூட இத்தகைய சில பண்புகளை நாம் காணக்கூடியதாக இருந்தது. உதாரணமாக மனிதர்களுக்கு மட்டுமல்ல மிருகங்களுக்குங்கூட தாகசாந்தி செய்வதற்காக நீர்த்தொட்டிகளை வீட்டிற்கு வெளியிலும் , பொது இடங்களிலும் ஏற்படுத்தியமை, விழிப்புலனற்றோர் போன்றோருக்கு வீதியைக் கடப்பது போன்ற வற்றிற்கு உதவுதல் விருந்தோம்பல் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

செல்வம் தேடுவதையே ஒரே இலட்சியமாகக்கருதி செயற்பட்டுக் கொண்டிருக்கும் இன்றைய உலகில் இத்தகைய நல்ல பண்புகள் குறைவடைந்து செல்வது இயல்பானதே. ஆனாலும் நல்ல சிந்தனை நல்ல செயற்பாடு என்பவற்றினடிப்படையில் தர்மகாரியங்களைச் செயற்படுத்தும் பொழுது வற்றாத ஊற்றுப்போல செல்வமும் வந்துகொண்டிருக்கும் என்பதற்கு ஆச்சிரமத்தின் பொதுவான செயற்பாடுகள் மட்டுமல்ல குறிப்பாகவும் சில சம்பவங்கள் நடந்த வண்ணம் இருப்பதை அடியார்கள் அறிந்து கொள்வது பொருத்தமானதே.

சந்நிதியான் ஆச்சிரமம் பரந்த சிந்தனையுடன் பலருக்குப் பயன்படும் வகையில் பல நல்ல சேவைகளை மேற்கொண்டு வருகின்றது இந்தச் செயற்பாடுகள் சிறிய அளவில் ஆரம்பிக்கப்பட்டாலும் அனைவரது கவனத்தையும் ஈர்க்குமளவுக்கு அதிகமான மக்கள் பயனடையக் கூடிய பல செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகின்றது.

வாழ்க்கையில் மிகவும் நலிவுற்றவர்களுக்கான மாதாந்த


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதவித்திட்டமும் இவற்றில் ஒன்றாகும். இத்திட்டத்தின் கீழ் சிலருக்குப் பொருட்கள் சிலருக்குப் பணம் இன்னும் பலருக்குப் பொருளும் பணமும் என்ற வகையில் உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன. இவ்வாறான உதவிகளை வழங்குவதற்குத் தேவையான பணம், பொருள் என்பன ஆச்சிரமத்தால் சேமித்து வைக்கப்பட்டுள்ள சொத்துக்களிலிருந்து வழங்கப்படுவதில்லை அவ்வாறு சேமித்து வைக்கப்படும் வழக்கமும் ஆச்சிரமத்திற்கில்லை, மேலும் தனிப்பட்டவர்களோ நிறுவனங்களோ இவற்றிற்கென விசேடமான உதவிகள் எவற்றையும் வழங்கும் வழங்கவுமில்லை ஆனாலும் இவ்வாறு உதவி பெறுவோருக்கு ஒவ்வொரு மாதமும் ஒரு ஒழுங்கு முறையில் வழங்கப்படும் உதவிகள் தொடர்ந்து வழங்கப்பட்டுக் கொண்டே வருகின்றன.

இவ்வாறு உதவிகள் வழங்கப்படுவது ஒரு அசாதாரண செயற்பாடென்றே கூறவேண்டும். ஏனென்றால் ஒரு சுற்றுவட்டப்பாதையில் ஒவ்வொரு கிழமையும் உதவிகளைப் பெறுவதற்கு அவர்கள் வரும்பொழுது அடுத்தகிழமை வாருங்கள் அடுத்த மாதம் வாருங்கள் என்று சுவாமிகள் யாரையுமே திருப்பிவிடுவதில்லை மாதாந்த உதவிகளைப் பெறுவோர் ஒரு ஒழுங்கு முறையில் ஆச்சிரமத்திற்கு வரும்பொழுது அவர்களுக்கு அவற்றை வழங்கக்கூடிய வகையில் ஆச்சிரமத்தின் அரிசிக் களஞ்சியமும் சுவாமிகளின் நிதி நிலைமைகளும் ஏதோ ஒரு வகையில் இடம் கொடுத்து வருகின்றது . அல்லது அவ்வாறு அவர்களுக்கு வழங்குவதற்கு ஏற்றவகையில் நிதி நிலமைகளை ஆச்சிரமத்தின் சுவாமிகள் ஒழுங்குபடுத்திக் கொள்கின்றார் எனவும் கூறலாம் இந்த இரண்டு நிலமைகளை மீறியதான சம்பவங்கள் ஏற்படாதா என்ற கேள்வி சராசரி மனிதர்களுக்கு ஏற்படுவது இயல்பானதே அத்தகைசம்பவங்களும் நடைபெற்றுக்கொண்டுதான் இருக்கின்றன.

13 - 04 - 2003 ஞாயிற்றுக்கிழமை மாலை 4 - 30 மணி மாதாந்த உதவிகளைப் பெறுவதற்காகவும் அதேநேரம் மாதாந்த உதவிகளைப் பெற்றுக்கொண்டிருப்போருக்கு வழங்கப்பட்டு வரும் உதவிகளை மீள்பரிசீலனை செய்வதற்காக அழைக்கப்பட்ட அன்பர்களும் ஆச்சிரமத்தின் முன் மண்டபத்தில் கூடியிருந்தனர். ஆச்சிரமத்தில் பேணப்படும் பதிவேட்டின்படி உதவிப்பொதியும் நிதியும் வழங்கப்பட்டுக்கொண்டிருந்தது அதேநேரம் ஆச்சிரமம் வழங்கும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதவியின் தன்மையை மீள் பரிசீலனை செய்வதற்காக அழைக்கப்பட்டவர்களை தனித்தனியாக அழைத்து அவர்களுடன் கலந்தாலோசனையும் நடைபெற்றுக்கொண்டிருந்தது. அவ்வாறான செயற்பாட்டிற்கு உதவியாக அடியேனும் அதில் பங்குபற்றிக் கொண்டிருந்தேன்.

இத்தகைய செயற்பாடுகளில் எல்லாம் மிகவும் கவனத்துடன் செயற்பட்டுக் கொண்டிருந்த ஆச்சிரமத்தின் சுவாமிகள் அடிக்கடி ஆச்சிரமத்தின் வெளிவாசலையும் அடிக்கடி அவதானித்துக் கொண்டிருந்ததையும் என்னால் உணரமுடிந்தது. ஆனால் அதற்கு நான் முக்கியத்துவம் கொடுக்கவில்லை அவ்வாறு முக்கியத்துவம் கொடுக்க வேண்டிய அவசியமும் எனக்கு அப்பொழுது ஏற்படவில்லை. ஆனால் அவ்வாறு அடிக்கடி ஆச்சிரமத்தின் வெளிவாசலை அவதானித்துக் கொண்டிருந்த சுவாமிகள் அப்பொழுது காரில் இருந்து இரண்டு பெண்களும் ஒரு ஆணும் இறங்கி நாங்கள் இருக்கும் இடத்தை வந்தடைந்தனர். காரில் இறங்கி முன்னுக்கு வந்துகொண்டிருந்த அந்த நபர் 5000 ரூபா பணத்தை சுவாமிகளிடம் வழங்கி வருகின்ற வெள்ளிக்கிழமை அன்னதானச் செயற்பாட்டுக்கு இதனைப் பயன்படுத்துங்கள் நாங்கள் நான்கு ஐந்து பேர் வருகிறோம் என்று கூறியதுடன் நீண்ட நாட்களுக்குப் பின்பு அவர்கள் ஆச்சிரமத்துக்கு வருகை தந்தமையால் சிறிது நேரம் எங்களுடன் உரையாடிய பின் விடைபெற்றுச் சென்றனர்.

வந்தவர் வல்வெட்டித்துறையைச் சேர்ந்தவர் தற்பொழுது கொழும்பில் வெள்ளவத்தையில் வசித்து வருகின்றார். பெயர் விஜயதாஸ் வல்வெட்டித்துறையில் பிரபல்யம் பெற்றவரும் அமரத்துவமடைந்தவருமான விஷ்ணு சுந்தரத்தின் மருமகனுமாவார். அவர் சென்ற பின்பு சுவாமிகள் என்னிடம் பின்வருமாறு கூறினார்கள். "மாஸ்ரர் உண்மையில் இங்கே அழைக்கப்பட்டவர்களுக்கும் பணம் கொடுத்து ஏனைய செயற்பாடுகளையும் சமாளிப்பதற்கு பணம் போதாதிருந்தது." யாரும் இந்தநேரம் பணம் கொண்டு வந்தால் எவ்வளவு உதவியாக இருக்கும் அப்பதான் என்னால் சமாளிக்க முடியும் என்று யோசித்துக் கொண்டிருந்தனான்.

நான் யோசித்தது போல சந்நிதியான் அதனை அவ்வாறே செய்து முடித்துள்ளான். இவ்வாறான கஷ்டமான நேரங்களில் எல்லாம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனது கஷ்டத்தைப் போக்குமாறு சந்நிதியானைத் தானே நான் கேட்கமுடியும் என்று உணர்வுததும்ப அடியேனிடம் எடுத்துக் கூறினார்.

அப்பொழுது உடனிருந்த பேரவையின் நிர்வாக சபை உறுப்பினரும் ஓய்வு பெற்ற உதவித் தபால் அதிபருமான திரு. செ. நடராஜா அவர்களும் ஓம் மாஸ்ரர் இப்படியான கஷ்டமான நேரங்களில் ஏதோ ஓர் வடிவில் தீர்வுக்கான வழி இங்கே ஏற்பட்டுக் கொண்டிருக்கின்ற அதிசய அனுபவங்களை பலமுறை நானும் இங்கே நேரடியாகப் பார்க்க முடிந்துள்ளதாக என்னிடம் எடுத்துக் கூறினார்கள்.

ஓம் முருகா!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சந்நிதியான் எட்டு

திரு. கே. தர்மலிங்கம் அவர்கள் தமது மாதச்சம்பளத்தைப் பெற்றுக் கொண்டதும் கொழும்பில் கல்வி கற்றுக்கொண்டிருக்கும் தனது மகனுடைய செலவிற்கு வழங்குவதற்காக வழமை போல வவுனியாவில் இருந்து கொழும்புக்குச் செல்லும் இரவு ரெயினில் அதனை எடுத்துச் செல்கின்றார்.

அவ்வாறு எடுத்துச் செல்லும் வழியில் திடீரென எதிர்கொண்ட கொள்ளையர்கள் அவர் எடுத்துச் சென்ற பணத்தை அபகரித்து விடுகின்றனர். மாதாந்த சம்பளத்தில் மகனின் கல்விச் செலவிற்காக எடுத்துச் சென்ற பணம் அபகரிக்கப்பட்ட வேதனை ஒரு பக்கம், பணத்தைக் கள்வர்களிடம் பறி கொடுத்த அதிர்ச்சி மறு பக்கமுமாக அவரது இதயம் வேகமாக அடிக்கத் தொடங்குகின்றது....

இந்த நிலையில் திரு கே. தர்மலிங்கம் அவர்கள் திடீரென கண்விழிக்கின்றார்கள்.... அப்பொழுதுதான் தெரிகிறது நடந்த சம்பவம் கனவில் இடம்பெற்றது என்பது இவ்வாறு கனவில் ஏற்பட்ட நிகழ்வு என்பதை உணர்ந்தவுடன் திரு. கே. தர்மலிங்கம் அவர்களுக்கு திருப்தி ஏற்பட்டாலும் உள்ளத்தில் ஓர் மூலையில் பய உணர்வு ஒன்று இருப்பதை அவர் உணரத்தவறவில்லை. மேலும் இந்தக் கனவை சாதாரண ஒரு விடையமாக எடுக்க முடியாதிருந்தமைக்கு ஒரு முக்கிய காரணம் ஒன்று இருந்தது. நடந்து முடிந்த சம்பவம் கனவாக இருந்தாலும் திரு. தர்மலிங்கம் அவர்கள் தனது மகனுக்கு கொழும்பிற்கு பணத்தை எடுத்துச்செல்ல வேண்டிய செயற்பாடு நடந்தேறவேண்டிய செயற்பாடாகவே இருந்தது.

தற்பொழுது பாடசாலை வீதி றம்பைக்குளம் வவுனியா என்ற விலாசத்தில் வாழ்ந்து வரும் திரு. தர்மலிங்கம் அவர்கள் வவுனியா பொது சுகாதார வைத்திய சேவைப் பகுதியில் கடமையாற்றி கொண்டிருக்கிறார். 1991ஆம் ஆண்டு கொழும்பு திறந்த பல்கலைக்கழகத்தில் பொறியியலாளராக கல்வி கற்றுக்கொண்டிருந்த மகன் த. சிவாகரனுக்கு மாதா மாதம் வவுனியாவிலிருந்து கொழும்புக்கு பணத்தை எடுத்துச் சென்று வழங்குகின்ற காலகட்டத்திலேயே மேற்படி கனவு தொடர்பான நிகழ்வு இடம்பெற்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு. தர்மலிங்கம் அவர்கள் கனவு என்பது வழமையான செயற்பாடு என்றும் அந்தவகையில் தான் கண்ட கனவிற்கும் மிகையான முக்கியத்துவம் கொடுக்க விரும்பாது தமது செயற்பாடுகளை மேற்கொள்ளலானார். ஆனால் அவரது மனைவி திருமதி பவானி அவர்கள் இந்தக் கனவிற்கும் மிகவும் முக்கியத்துவம் கொடுத்து சிந்திக்கலானார். இது நாம் வழிபடுகின்ற குல தெய்வமான சந்நிதியானின் திருவருளால் நிகழ்ந்த ஒரு செயற்பாடு என்பதை கணவனுக்கு எடுத்துக்கூறி ஏதோ ஒரு ஆபத்து ஏற்பட இருந்தபடியால் தான் இந்த கனவு எமக்கு ஏற்பட்டதென்றும் அதனால் அடுத்த நாள் மேற்கொள்ள இருந்த பயணத்தை ஒத்திப்போடுவது பற்றிச் சிந்திக்கலானார்கள்.

இருந்த பொழுதிலும் பயணத்தை ஒத்திப்போடுவதனால் திங்கக்கிழமை இங்கு வேலைக்கு திரும்பி வரமுடியாது லீவு போடவேண்டிய சூழ்நிலையும் அதே நேரம் பணத்திற்காக எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் மகனுக்கும் பணம் கிடைக்க முடியாது போய்விடுவதற்கான சூழ்நிலைகளையும் கருத்திற்கொண்டு குழப்பத்தின் மத்தியில் மிகவும் எச்சரிக்கையாக பயணத்தை மேற்கொள்வதெனவும் தமது குலதெய்வமான சந்நிதியான் காவற் தெய்வமாக எமக்குத் துணைசெய்யத்தானே வேண்டும் என்றும் சந்நிதியானின் துணையுடன் பயணத்தை மேற்கொள்வதற்கும் முடிவு செய்தனர்.

திரு. தர்மலிங்கம் அவர்கள் சனிக்கிழமை இரவு வவுனியாவில் புகையிரதம் ஏறி மிகவும் கவனமாக தனது பயணத்தை மேற்கொண்டு கொழும்புக் கோட்டையில் போய் இறங்கினார். அதிகாலையிலேயே புகையிரதம் கோட்டையைச் சென்றடைந்தமையால் அவர் வழமையாகச் செல்வது போல அங்கிருந்து பஸ் எடுத்து பம்பலப்பிட்டி கதிரேசன் கோயிலில் போய் இறங்கினார் அங்கே முகம் கால் கழுவி கதிரேசனை வணங்கி முடியவும் காலையில் நிலம் நன்கு தெளியவும் சரியாக இருந்தது. தற்பொழுது திரு தர்மலிங்கம் அவர்களுக்கு நிம்மதியும் தைரியமும் ஏற்பட்டது . உண்மையில் வழியில் எதிர்பார்த்தது மாதிரியாக எந்தவிதமான ஆபத்துக்களோ இழப்புக்களோ அவருக்கு ஏற்படவில்லை. தனது மனைவி பவானி அவர்கள் முதல் நாள் தான கண்ட கனவினை மிகைப்படுத்திச் சிந்தித்தது அநாவசியமானதென்று


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நினைத்தாலும் ஆபத்து எதுவும் ஏற்படவில்லை என்பதையிட்டு அவர் திருப்தியடையத் தவறவும் இல்லை.

தற்பொழுது வெள்ளவத்தையில் பிறெட்றிக்கா வீதியில் குடியிருக்கும் தனது மகனிடம் பம்பலப்பிட்டி கதிரேசன் கோயிலிருந்து வழமைபோல நடந்து செல்லலானார். காலையில் ஓரளவு சன நடமாட்டம் ஏற்படத் தொடங்கியிருந்ததால் உள்ளூர இருந்த பய உணர்வும் அற்றுப்போக தனது மகனை சந்திக்கப் போகும் மகிழ்ச்சியுடன் பிறெட்றிக்கா வீதியைச் சென்றடைந்தார்.

அப்பொழுது திடீரென தென்பட்ட இரண்டு புலனாய்வு பிரிவினர் பொலிசார் திரு தர்மலிங்கம் அவர்களை மறித்து சோதனையிட முற்பட்டனர். இதனால் திரு தர்மலிங்கம் அவர்கள் பதட்டமடைந்தாலும் தான் ஒரு அரசாங்க உத்தியோகத்தர் என்ற நிலையில் தனது தேசிய அடையாள அட்டை உத்தியோகத்தருக்கான அடையாள அட்டை என்பவற்றை எல்லாம் காண்பித்ததினால் அவர்களும் இயல்பாக சோதனையை நடத்துவது போல நடாத்த முற்பட்டனர். ஆனாலும் அவரது சூட்கேஸ் அவரது உடம்பு முழுவதையும் சோதனையிட்ட புலனாய்வு பிரிவினரில் ஒருவனுக்கு அவரது இடுப்பில் பணம் இருப்பதில் சந்தேகம் ஏற்பட்டுவிட்டது.

பிரதான வீதியான காலிறோட்டிலிருந்து விலகி பிறெட்றிக்கா றோட்டின் முகப்பிலேயே இந்த சம்பவம் நடந்து கொண்டிருந்தது. அந்த குறுக்கு றோட்டில் மோட்டார் சைக்கிளுடன் நின்ற புலனாய்வு பிரிவினர் திரு தர்மலிங்கத்தை சோதனைகள் முடிந்த நிலையிலும் கையினால் சைகை காட்டி குறுக்கே றோட்டுக்குள் தனக்கு கிட்ட வருமாறு அழைத்துக் கொண்டிருந்தான். நிலைமையைப் புரிந்து கொண்ட திரு தர்மலிங்கம் அவர்கள் அப்பொழுதுதான் தான் கண்ட கனவினையும் அதன் அர்த்தத்தையும் முழுமையாகப் புரிந்து கொண்டவராக சந்நிதி வேலவனை மனதில் சிந்தித்தவாறு தனது உடலிலும் உள்ளத்திலும் முழுமையாகத் தைரியத்தை வரவழைத்துக் கொண்டவராகக் குறுக்கு றோட்டிலிருந்து பிரதான வீதிக்கு வந்து அந்தப் பிரதான வீதி வழியாக மிகவேகமாக ஓட்டமெடுக்கலானார்.

இவ்வாறான அசட்டுத் தைரியத்துடன் செயற்படுவார் என்பதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிர்பாராது புலனாய்வு பிரிவினர் உருவத்தில் இருந்த கொள்ளையர்கள் திகைத்து நிற்க பிரதான வீதிவழியே வந்த மினிபஸ் காரர் ஓடி வருபவர் ஆபத்தில் சிக்குப்பட்டு ஓடிவருகின்றார் என்பதை உணர்ந்தவராக மினிபஸ்சை அவர் ஏறுவதற்கு சாதகமாக நிப்பாட்ட அவர் அந்தப்பஸ்சில் ஏறிக் கொண்டார். அதன் பின்பு ஏனையவர்களின் உதவியுடன் ஆபத்து ஏதுமின்றி அவரால் தப்பிக் கொள்ள முடிந்தது.

சம்பவம் நடந்த ஒரு சில வருடத்தின் பின்பு இந்தச் சம்பவம் பற்றி திருமதி பவானி தர்மலிங்கம் அவர்கள் அடியேனிடம் உணர்வுபூர்வமாக எடுத்துக்கூறி பயணத்தின் முன்பும் பயணத்தின் பொழுதும் யாக்கிரதையாக இருந்தமையால் தான் தனது கணவன் தப்ப முடிந்தது என்றும் அவ்வாறு எச்சரிக்கையாக இருந்து தாங்கள் காப்பற்றப்பட்டதற்கு சந்நிதியானின் திருவருளே காரணம் என்பதை உணர்வு பூர்வமாக எடுத்துக் கூறியிருந்தார். இரண்டு வாரங்களுக்கு முன்பு திரு. தர்மலிங்கம் பவானி குடும்பத்தினர் சந்நிதியானிடம் வந்திருந்த பொழுது தருமலிங்கம் அவர்களே நேரடியாக இந்த சம்பவம் பற்றி மிகவும் விளக்கமாக அடியேனிடம் மீண்டும் எடுத்துக் கூறினார்.

அவர்கள் இரண்டு விடயங்களை முக்கியமாக என்னிடம் எடுத்துக் கூறினார். ஒன்று அந்தக்கனவு ஏற்பட்டிருக்காவிட்டால் தான் கவனயீனமாக இருந்திருப்பேன் இரண்டாவதாக ஆபத்து ஏற்பட்டுள்ளது என்று உணர்ந்தவுடன் தான் சந்நிதியானை நினைத்ததாகவும் அந்தக்கணமே தனக்கு எங்கிருந்து அந்தத் துணிச்சல் வந்ததோ தெரியாது தான் மிக வேகமாக செயற்பட்டது பற்றியும் எடுத்துக்கூறி இவை இரண்டும் இடம்பெறாவிட்டால் நிச்சயம் தான் கனவில் கண்டது போல வழிப்பறி இடம்பெற்றிருக்கும் என்றும் இது சந்நிதியானின் திருவருளே என்பதையும் எங்கள் குடும்பத்தில் அனைத்தும் அவனை நம்பியே இடம்பெறுகின்றன எனவும் எடுத்துக் கூறினார்கள்.

தற்பொழுது மகள் க. பொ. த. (உ. த) சோதனை எடுத்து விட்டார். நாம் குடும்பமாக வவுனியாவிலிருந்து சந்நிதியானிடம் வந்து தங்கி வழிபடுகின்றோம். எந்த வழிவிட்டாலும் அது நல்ல வழியாகத்தான் இருக்கும் என்று அவரது மனைவி பவானி அவர்கள் தற்பொழுது சந்நிக்கு வந்ததற்கான காரணத்தை எடுத்துக் கூறினார்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணவன்,மனைவி, பிள்ளைகள் அனைவரும் சந்நிதியானுக்கு அடிமையானவர்கள் முருகேசு சுவாமிகளின் அன்பிற்கும் அரவணைப்பிற்கும் பாத்திரமாகி அவரின் ஆற்றுப்படுத்தலினால் சந்நிதியானிடம் அளவில்லாத பக்தி கொண்ட குடும்பமாக இவர்கள் இன்றும் வாழ்ந்து வருகின்றனர்.

உண்மையான உள்ளுணர்வுடன் வழிபட்டு அவனது திருவருளுக்கு பாத்திரமானவர்களது துன்பங்களை போக்குவதற்கு சந்நிதியான் என்றும் துணையாக இருந்து வருகின்றான். அது மட்டுமல்ல அவர்களைத் தானாகவே நாடி வந்து காக்கும் கடவுளாகவும் சந்நிதியான் அற்புதம் செய்வதனால் தானே ஆயிரம் ஆயிரம் அடியார்கள் அங்கே வந்தவண்ணமுள்ளனர்.

ஓம் முருகா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்நிதியான் ஒன்பது

சந்நிதியான் ஆச்சிரமம் பொதுவைத்திய சேவையை மட்டுமன்றி கண்வைத்தியசேவை கண்ணாடி வழங்கும் செயற்பாடு என்பவற்றுடன் சிறப்பாக மகப்பேற்று வைத்திய சேவையை 2003 ஆம் ஆண்டு காலகட்டத்தில் செயற்படுத்திக் கொண்டிருந்தது.

மகப்பேற்று வைத்தியசேவை சந்நிதியான் ஆச்சிரமத்தில் நடைபெற ஆரம்பித்த நிகழ்வும், இங்கே இந்த வைத்திய சேவை நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற முறையும் இந்த வைத்தியசேவையை நடாத்திக்கொண்டிருக்கும் மகப்பேற்று வைத்திய நிபுணர் தொடர்பான செயற்பாடுகளும் சாதாரண விடயங்களாகக் கருதக்கூடியவை அல்ல.

மகப்பேற்று வைத்தியசேவையை ஆச்சிரமத்தில் ஆரம்பித்த நிகழ்வே ஒரு அற்புத நிகழ்வாகும் . சந்நிதியான் ஆச்சிரமத்தில் பொது வைத்தியசேவை ஆரம்பித்தபொழுது துறைசார்ந்த வைத்தியசேவையாக மகப்பேற்று வைத்திய சேவையும் ஆச்சிரமத்தில் ஆரம்பிக்க விருப்பம் இருந்தாலும் அது பெண்களுடன் சம்பந்தப்பட்டிருந்தமையாலும் அத்தகைய வைத்திய வசதிகளை தனியாக ஏற்படுத்துவதற்கு ஆச்சிரமம் பொருத்தமான இடமாக அமைய முடியுமா என்ற கேள்வியும் பலருடைய மனதில் எழுந்ததையும் நாம் கருத்தில் கொண்டோம்.

இத்தகைய நிலமைகளால் மகப்பேற்று வைத்தியசேவையை ஆச்சிரமத்தில் ஆரம்பிப்பதில் சுவாமிகள் மனச்சஞ்சலப்பட்டாலும் மகப்பேற்று வைத்திய சேவையை ஆச்சிரமத்தில் ஆரம்பிப்பது என்ற முடிவை சுவாமிகள் தனது மனத்தில் இருந்து ஓரங்கட்ட முடியாத நிலையில் ஏதோ சந்நிதியான் விட்ட வழியே நடக்கட்டும் என எண்ணிக்கொண்டு 14. 10. 2001இல் இருந்து ஆச்சிரமத்தில் பொது வைத்திய சேவையை ஆரம்பிக்க முடிவு செய்தார்.

மேலும் திருமதி பவானி அவர்கள் தனது வைத்திய சேவையை தொழிலாக மட்டுமன்றி சேவையாகவும் நினைத்து இந்த மண்ணுக்காகவும் மக்களுக்காகவும் செயற்படுத்துகின்ற முற்போக்கான ஒரு பெண்மணி என்பதை ஏற்கனவே அடியேன் ஓரளவு அறிந்திருந்தேன். இந்தவகையில் பொது வைத்திய சேவையை முதலில் ஆரம்பிப்பதென்றும் அதன் பின் நாம் அவரிடம் சென்று எமது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூய்மையான பணிகள் பற்றி எடுத்துக்கூறி அந்தப்பணியில் அவரது பங்களிப்பையும் வழங்குமாறு கேட்பதற்கு முடிவு செய்திருந்தோம். இந்த நிலையில் திருமதி பவானி அவர்களுடன் நாம் எவ்வித தொடர்பும் ஏற்படுத்தாதிருந்த நிலையிலேயே எமது பொது வைத்தியசேவை 04.11.2001இல் ஆரம்பித்திருந்தோம். இந்த நிலையில் எதிர்பாராத நிலையில் அன்று காலை மகப்பேற்று வைத்திய நிபுணர் திருமதி பவானி அவர்கள் ஆச்சிரமத்திற்கு நேரடியாக வருகைதந்தார்கள். அது மட்டுமல்ல நீங்கள் இங்கே வைத்திய சேவையை ஆரம்பிக்க இருப்பதாக அறிந்தேன் அதில் நானும் எனது பங்களிப்பை வழங்க ஆயத்தமாக இருக்கின்றேன் என சுவாமிகளிடம் கூறுகின்ற அதிசயம் ஒன்று நடந்தேறியது.

இவ்வாறு திருமதி பவானி அவர்களே நேரடியாக வருகை தந்து தனது சேவையை வழங்க முன்வந்த செய்தியைக் கேட்ட சுவாமிகள் சந்நிதியானுடைய திருவிளையாடலையும், உள்ளத்தில் ஏற்பட்ட ஆச்சரியத்துடன் கூடிய மனத்திருப்தியையும் அப்படியே அந்தநேரம் திருமதி பவானி அவர்களுக்கு வெளிக்காட்டாது தனது வழமையான பாணியில் நல்லதம்மா! மிகவும் சந்தோசம் என்று கூறி இன்முகத்துடன் அவரை உபசரித்தார்கள். அத்துடன் அவரது மகப்பெற்று வைத்திய சேவையை ஆரம்பிக்கும் நாளையும் அப்பொழுதே முடிவு செய்து அதற்கிணங்க 18. 11. 2001ஆம் ஆண்டு ஆச்சிரமத்தில் மகப்பேற்று வைத்திய சேவையும் ஆரம்பிக்கப்பட்டது.

திருமதி பவானி அவர்களது வைத்திய சேவை ஆச்சிரமத்தில் ஆரம்பிக்கப்பட்டது எவ்வளவு ஆச்சரியம் தரும் நிகழ்வாக இடம்பெற்றதோ அதேபோன்று சந்நிதியானிடம் வந்து தனது சேவையை வழங்க முன்வந்தது அவருக்கு அது ஒரு அதிசய நிகழ்வாகவே நடந்தேறியதை அவரே எம்மிடம் எடுத்துச் கூறினார். உடுப்பிட்டி சந்தைவீதியில் ஆனந் தொலைத்தொடர்பு நிலையத்தின் உரிமையாளரான கு. ஆனந்தகுமார் என்பவர் உடுப்பிட்டியில் மகப்பேற்று வைத்தியசேவையை ஆரம்பிப்பது தொடர்பாக தன்னிடம் பலமுறை வந்து கேட்டும் அதற்கு தான் மறுத்து விட்டதாகவும் இறுதியாக தன்னிடம் வந்து கேட்டபொழுது தான் அங்கே செல்ல மறுத்ததாகவும் அந்த நேரம் ஆனந்தகுமார் உடுப்பிட்டி என்பது சந்நிதிகோவிலுக்கு கிட்ட உள்ள ஒரு கிராமம் நீங்கள் உடுப்பிட்டிக்கு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்தால் சந்நிதியானையும் தரிசிக்கலாம் என்று கூறிய பொழுது தனது உள்ளத்தில் மின்னல் ஏற்பட்டது போன்ற ஒரு உணர்வினால் தூண்டப்பட்டு உடுப்பிட்டிக்கு வைத்திய சேவையை வழங்க வருவதற்கு சம்மதித்தது பற்றியும் அதைத்தொடர்ந்தே சந்நிதியான் ஆச்சிரமத்தில் இடம்பெறும் வைத்திய சேவையிலும் பங்களிப்பை வழங்க வேண்டும் என்ற உணர்வு ஏற்பட்டது பற்றியும் எடுத்துக்கூறினார்கள்.

"கேளுங்கள் தரப்படும் தட்டுங்கள் திறக்கப்படும்" என்ற இறையருளின் சிறப்பைத்தான் நாம் கேள்விப்பட்டிருக்கின்றோம். ஆனால் இங்கே சந்நிதியானுடைய சந்நிதானத்தில் கேட்கவும் தேவையில்லை நினைக்கின்ற பொழுதே நல்ல காரியங்கள் எல்லாம் நடந்தேறுகின்ற விந்தை தான் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. இத்தகைய விந்தைகளைச் செய்யும் சந்நிதியானுடைய பாதங்களைப் பணிவதற்கு எமக்குள்ள இரண்டு கரங்கள் மட்டும் போதுமானவையா? இல்லை இல்லை இரண்டாயிரம் கரங்கள் அல்லவா எமக்குத் தேவைப்படுகின்றன.

மகப்பேற்று வைத்திய சேவை சந்நிதியான் ஆச்சிரமத்தில் நடைபெறுகின்ற முறைகூட அனைவரது உள்ளங்களையும் தொடுவதாகவே உள்ளது. திருமதி பவானி அவர்கள் சந்நிதியான் அச்சிரமத்தில் வழங்கப்படும் தன்னுடைய வைத்தியசேவையை மிக முக்கியமானதொன்றாகக் கருதிச் செயற்பட்டு வருகின்றார். அத்துடன் எத்தனை எண்ணிக்கையான தாய்மார்கள் சேவை பெற வந்தாலும் இன்முகத்துடன் அனைவருக்கும் தனிப்பட்ட கவனத்துடன் சிகிச்சை அளிப்பது சிகிச்சை பெற வந்த அத்தனை தாய்மார்களும் முழுமையான மனநிறைவைத் தருகின்ற ஒரு விடயமாகவும் உள்ளது.

இன்று வைத்தியசேவை கூட பல இடங்களில் முழுமையாக பணம் சம்பாதிப்பதை நொக்கமாகக் கொண்டு செயற்படுத்தப்படும் பொழுது இல்லை! இல்லை! வைத்தியசேவை என்பது ஒரு புனிதமான சேவை என்று நாங்கள் இளமையில் புத்தகங்களில் படித்ததை உறுதிப்படுத்துகின்ற உண்மையான விடயம் என்பதை நேரடியாகப் பார்வையிட விரும்புகின்றவர்களுக்கு எடுத்துக்காட்டுவதாக திருமதி பவானி அம்மா அவர்களது வைத்திய சேவை ஆச்சிரமத்தில் அப்பொழுது இடம்பெற்றுக்கொண்டிருந்தது. வைத்திய சேவையைப் பெறுகின்ற தாய்மார்கள் அனைவரும் உளப்பூர்வமான வாழ்த்துக்களைத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெரிவித்து உள்ளப்பூரிப்புடன் வீடு திரும்புகின்ற அதேவேளை இத்தகைய ஒரு மகப்பேற்று வைத்திய சேவையைப் பெற்றுக்கொண்டதற்காக நாங்கள் இன்று மட்டுமல்ல என்றுமே நன்றியுள்ளவர்களாக இருப்போம் என்ற உணர்வலைகளுடன் பிரிந்து செல்வது உண்மையில் மனிதநேயத்தின் ஒரு உச்சக்கட்டம் என்றே கூறவேண்டும்.

இத்தகைய சிறப்புக்கள் நிறைந்த வைத்தியசேவையை சந்நிதியான் ஆச்சிரமத்தில் இலவசமாக வழங்குவதற்கு தன்னை அர்ப்பணித்துள்ள திருமதி பவானி அம்மா அவர்கள் இதற்கு மேலாக மேற்கொண்டு வரும் செயற்பாடு உண்மையில் எங்கள் உள்ளங்களை எல்லாம் உருக்குவதாக அமைந்து விட்டது.

ஆம்! திருமதி பவானி அம்மா அவர்கள் ஆச்சிரமத்திற்கு சேவைசெய்கின்ற தினம் வடமராட்சியில் வேறு இடங்களில் தனது சேவையை வழங்குவதால் கிடைக்கும் வருமானம் முழுவதையும் சந்நிதியான் ஆச்சிரமத்தில் இலவசமாக வழக்கப்படும் வைத்தியசேவை போன்ற மனிதநேயச் செயற்பாடுகளுக்காகவே பயன்பட வேண்டுமென்று சந்நிதியான் ஆச்சிரமத்திற்கே அந்தப்பணம் முழுவதையும் அன்று தொடக்கம் இன்று வரையும் அன்பளிப்பாக தொடர்ந்து வழங்கிக்கொண்டிருக்கிறார். இதை சாதாரண ஒரு விடயமாகவோ அல்லது சாதாரணமானவர்கள் செய்யும் விடயமாகவோ கருதி விட முடியுமா?

இவ்வாறான தொண்டுள்ளம் படைத்தவர்கள் இந்த மண்ணில் வாழ்வதால் உண்மையில் இந்த மண் அல்லவா சிறப்புப்பெறுகின்றது. தாயுள்ளம் எப்படிப்பட்டது என்பதை விளங்கிக் கொள்வதற்கு பவானி அம்மா அவர்களது இந்த தொண்டு எமக்கெல்லாம் உதாரணமாக அமைந்து விட்டது மேலும் படித்தவர்கள் பதவியில் உள்ளவர்களால் எமது சமயம் எவ்வாறு சிறப்படைய முடியும் என்பதற்கு இவரது வாழ்க்கை எல்லோருக்கும் எடுத்துக்காட்டாக அமைவதையும் யாரும் மறுக்க முடியுமா? அதுமட்டுமா இந்த மண்ணில் வாழ்ந்துகொண்டே மகத்தான வாழ்க்கையை வாழலாம் என்பதை புலம்பெயர்ந்தவர்களும் புரிந்து கொள்வதற்கு திருமதி பவானி அம்மா அவர்களது வாழ்க்கைப் பயணம் ஓர் எடுத்துக்காட்டாக அமைந்து விட்டது எனக்கூறலாம்.

ஓம் முருகா!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சந்நிதியான் பத்து

27. 08. 2003க்குப் பின் இரவு 2. 30 மணியளவில் ஆரம்பித்த ஸ்ரீ செல்வச்சந்நிதி வருடாந்த உற்சவக்கொடியேற்றத் திருவிழாவில் பல்வேறு பகுதியிலிருந்தும் அடியார்கள் வந்து பக்திப்பரவசத்துடன் பங்குபற்றினர்.

குறிப்பிட்ட குடும்பத்தவர் குறிப்பிட்ட ஊரைச்சேர்ந்தவர்கள், குறிப்பிட்ட பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் என்ற எல்லைகளைக் கடந்து பல்வேறு பிரதேசங்களிலிருந்தும் பல்வேறுவகைப்பட்ட மக்கள் ஒன்று கூடி அந்தநாள் முழுவதும் கண்விழித்திருந்து கொடியேற்றத்திருவிழாவில் பங்குபற்றியது ஒரு புதுமையான காட்சியாகவே தென்பட்டது. எமது சமயம், எமது ஆலயங்கள் எவ்வாறு எல்லாம் செயற்பட வேண்டுமென்று நாம் எதிர்பார்க்கின்றோமோ அவற்றை எல்லாம் செயற்படுத்துகின்ற விதத்தில் ஸ்ரீ செல்வச்சந்நிதி கொடியேற்றத்திருவிழா அமைந்திருந்தது.

அதாவது உண்மையான இறைவழிபாட்டினை உண்மையான பக்தியினை, உண்மையான பண்பாட்டினை மக்கள் வெளிப்படுத்தி நின்ற காட்சிகளை எல்லாம் ஒருங்கே காணுகின்ற சிறப்பை கொடியேற்றத் திருவிழா கொண்டமைந்திருந்தது. அனைவருக்கும் திருப்தியை ஏற்படுத்துவதாக அமைந்திருந்தது. இவ்வாறான பல்வேறு சிறப்புக்களை சந்நிதி உற்சவம் உள்ளடக்கியிருந்தாலும் தேர் உற்சவத்தின் பொழுது கட்டுத்தேர் குடை சாய்ந்தது அனைவருக்கும் மிகுந்த வேதனை அளிக்கும் விடயமாக அமைந்து விட்டது.

தேர் குடை சாய்ந்தபொழுது அடியார்கள் உள்ளத்தில் ஏற்பட்ட உணர்வலைகள் வார்த்தைகளால் வர்ணிக்கமுடியாத அளவு துன்பியல் உணர்வுகளைக் கொண்டிருந்த அதேநேரம் இந்த நிகழ்வு முடிவடைந்து நீண்ட நேரத்திற்குப் பின்பும் பல அடியார்கள் வாய்விட்டு கதறி அழுதவண்ணமிருந்த காட்சி உள்ளத்தை உருக்குவதாக அமைந்திருந்தது. இவ்வாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி உற்சவத்தின் பொழுது தேர் குடை சாய்ந்திருந்த நிகழ்வு ஒரு பக்கம் கவலை தருகின்ற நிகழ்வாகக் கருதப்படுகின்ற அதேவேளை கட்டுத்தேர் குடைசாய்ந்த இடம் குடைசாய்ந்த விதம் போன்றவற்றை ஆழமாகச் சிந்திக்கும் பொழுது அங்கே சந்நிதியானுடைய திருவிளையாடல்கள் நிறைந்த இன்னொரு பக்கமும் அதற்குள் இடம்பெற்றுள்ளதை நாம் உணரமுடியும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுத்தேரின் பாவனைக் காலம் முடிவடைந்து அல்லது அது பழுதடைந்து அது இயல்பாகவே குடைசாய்கின்ற நிகழ்வு ஒன்று நடக்கவேண்டியது தவிர்க்க முடியாத ஒரு சம்பவமாகவே கொள்ளப்பட வேண்டும். ஆனால் இந்த தவிர்க்க முடியாத சம்பவத்தில் எவை எவை நடைபெறாது தவிர்க்கப்பட வேண்டும் என்று நாங்கள் நினைக்கின்றோமோ அவற்றை எல்லாம் தவிர்த்து கலியுகக்கந்தன் ஒரு அற்புதத் தெய்வம் என்பதை அனைவருக்கும் வெளிப்படுத்தியுள்ளது தான் உண்மையில் அதியசமான விடயமாகும்.

சந்நிதியானுடைய தேர் குடைசாய்ந்த இடத்தையும் குடைசாய்ந்த விதத்தையும் நோக்கும் பொழுது கலியுகக்கந்தனின் கருணையை நாம் விளங்கிக்கொள்ள முடியும். ஆலயத்தின் மேற்கு வீதியில் சரியாக வள்ளியம்மன் வாசலுக்கு நேரே இந்த நிகழ்வு இடம்பெற்றுள்ளமையும் தேரின் முன்பக்கத்திலுள்ள வலது பக்கச்சில்லு அச்சு முறிவடைந்ததுமே. இவ்வாறு அனர்த்தங்கள் எதுவும் இடம்பெறாது தவிர்க்கப்பட்டதனுடைய முக்கிய தார்ப்பரியமாகும்.

சரியாக வள்ளியம்மன் வாசலில் இந்த நிகழ்வு இடம்பெற்றதனால் தான் தேரின் முடி அந்த வள்ளியம்மன் வாசலில் உள்ள கோப்பிசத்தில் தடைப்பட்டு முழுமையாக தேர் நிலத்தில் குடைசாய்ந்து விழாமல் காப்பாற்றக்கூடிய வாய்ப்பு ஏற்பட்டது. அதே நேரம் வலது பக்கச்சில்லில் பாதிப்பு ஏற்பட்டதனால்தான் தேர் வலதுபக்கம் குடைசாய்ந்து கோப்பிசத்தில் மோதி அதில் தடைப்படும் வாய்ப்பு ஏற்பட்டது உண்மையில் இந்த இடத்தைத் தவிர வேறு இடத்தில் இது நடந்திருந்தாலோ அல்லது இந்தச் சில்லு தவிர்ந்த வேறு சில்லில் பாதிப்பு ஏற்பட்டிருந்தாலோ நிலமைகள் மோசமானதாகவே இருந்திருக்கும்.

மேலும் எந்தவிதமான உயிர்ப்பாதிப்புக்களோ மோசமான உடற்காயங்களோ ஏற்படக்கூடாதென்ற சந்நிதியானுடைய கருணை அடியவர்கள் மேல் ஆழமாகப் பதிந்திருந்ததனை ஆதாரப்படுத்தும் ஏனைய விடயங்களையும் இங்கே குறிப்பிடுதல் பொருத்தமானது. உதாரணமாக தேர் சாய்ந்து சென்று கோப்பிசத்தில் மோதிபொழுது ஏறத்தாழ 20ற்கும் மேற்பட்ட ஓடுகள் உடைந்து நிலத்தில் வீழ்ந்த பொழுதிலும் அலைமோதிக் கொண்டிருந்த அடியார்கள் எவருக்குமே எந்தக்காயமும் ஏற்படவில்லை என்பதை நாம் சிந்திக்க வேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் தேர்வீதிஉலா வருகின்ற பொழுது எம்பெருமானுடன் உடனிருந்த உற்சவ காலப்பூசகர் ஆ. சிவசண்முக ஐயர், ஆலயத்தின் மூத்த பூசகர் க. ஆறுமுகசாமி ஐயர் ஆகிய இருவரும் செயற்பட்ட விதம் அவர்கள் எம்பெருமான் மீது கொண்டுள்ள பக்தியை வெளிப்படுத்தும் அதே நேரம் அவர்களுக்கு எந்தவிதமான சிறிய காயங்களும் கூட இல்லாமல் சந்நிதியான் காப்பாற்றியது அவர்கள் மீது சந்நிதியான் கொண்டுள்ள கருணையை வெளிப்படுத்தும் அற்புத நிகழ்வாகும்.


தேர் சிறிது சிறிதாக குடை சாய்வதை உணர்ந்த இரு பூசகர்களும் தங்களை முழுமையாக மறந்த நிலையில் சந்நிதியானுக்கு எதுவுமே நடக்கக்கூடாதென்ற உணர்வு மேலீட்டினால் எம்பெருமானை தங்கள் கைகளால் அணைத்த வண்ணமும் எம்பெருமான் நிலத்தில் சரியக்கூடாது என்பதிலும் தம்மை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டிருந்தது பார்ப்போரை வியப்படையச் செய்வதாக இருந்தது.

சிவசண்முக ஐயர் இரு கைகளாலும் முழுமையாக எம்பெருமானை அணைத்து நிற்க ஆறுமுகசாமி ஐயர் எம்பெருமானுடைய வெள்ளி மயில் வாகனத்தையும் எழுந்தருளி வேலவனின் வெள்ளிக் குடையையும் இறுக்கிப் பிடித்தவண்ணம் இருந்தமையால் எம்பெருமானுக்கு எந்தவித பாதிப்பும் ஏற்படவும் இல்லை. நிலத்தில் சாய்கின்ற நிலையும் ஏற்படவில்லை. மொத்தத்தில் இவ்வளவு அலைமோதுகின்ற அடியார்கள் மத்தியில் சந்நிதியானுடைய தேர் குடைசாய்ந்த பொழுதிலும் எவ்விதமான உயிரிழப்புக்களும் ஏற்படாதது மட்டுமன்றி குறிப்பிட்டுக் கூறக்கூடிய பாரிய காயங்களும் எதுவும் ஏற்படவில்லை என்பது எவ்வளவு பெரிய அதிசய நிகழ்வு என்பதை இங்கே நாம் சிந்திக்க முடியும்.

குறிப்பாக பலாலியிலிருந்தும், இந்த ஆலயத்தின் அக்கரையிலிருந்தும் ஆலயத்தை நோக்கி மோசமான செல் வீச்சுக்கள் இடம்பெற்ற போதும் யாருக்கும் உயிர்ச்சேதம் ஏற்படாத அற்புதம் நடந்ததையும், ஆலயத்தின் பழைய முன் மண்டபம் பகல் நேரத்தில் நிலத்தில் அப்படியே குடைசாய்ந்த பொழுதும் யாருக்கும் உயிர்ச்சேதமோ காயங்களோ ஏற்படாத நிலையையும் அடியார்கள் இவ்விடத்தில் சிந்திப்பது பொருத்தமானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகவே நிகழ்வுகள் எல்லாம் உண்மையானவை ஆனால் உயிர்ச்சேதம் ஏற்படாதது மட்டும் தற்செயலானது என எவரும் கருதக்கூடாது அது யதார்த்தத்திற்கு பொருத்தமற்ற கருத்தாகும்.



சந்நிதி ஆலயம் அற்புதமான ஆலயம். அங்கே அற்புதங்கள் நடப்பதென்பது இயல்பான விடயம் அதனால்தான் அடியார்கள் கூட்டம் எப்பொழுதும் அங்கே அலைமோதிக் கொண்டிருக்கிறது.

இங்கே நடப்பவை எல்லாம் நல்லதுக்கே நடக்கும். அவை நல்லவையாகவே முடிவடைகின்றன.

ஓம் முருகா!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சந்நிதியான் பதினொன்று

"யாமிருக்க பயமேன்" என்ற இறைவாக்கியம் பொதுவாகவே இறைநம்பிக்கை உள்ளவர்களின் உள்ளத்தை தொடுகின்ற ஒரு வாக்கியமாகும். சந்நிதியானை நாடிவருகின்ற அடியார்களுக்கும் , சந்நிதியானே தஞ்சமென தஞ்சமடைகின்ற அடியார்களுக்கும் இந்தவாக்கியத்தை நிதர்சனமான உண்மையாக்க நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற சம்பவங்கள் ஏராளம். அவற்றில் அண்மையில் நடைபெற்ற ஒரு சம்பவத்தை அடியார்களுடன் பகிர்ந்து கொள்ளுகின்றோம்.

இந்தவருடம் (2003) கதிர்காம உற்சவத்திற்கு சில நாட்களுக்கு முன்பு கொழும்பிலிருந்து சிவகுரு நாத அடிகள் தலைமையில் அகண்ட நாம பஜனை தொடர்பாக அடியார்கள் கூட்டம் ஒன்று அதற்கென தனியாக அமைக்கப்பட்ட வாகனம் ஒன்றில் சந்நிதி ஆலயத்திற்கு வருகை தந்திருந்தனர். இவர்கள் சிவாயநம என்ற ஐந்தெழுத்து மந்திரத்தை முழுநாளும் தொடர்ச்சியாக ஓதுகின்ற செயற்பாட்டின் மூலம் இறைசிந்தனையையும், இறை பக்தியையும் எல்லோர் மத்தியிலும் ஏற்படுத்தும் நோக்கமுள்ளவர்கள்.

இந்தவகையில் கதிர்காம உற்சவத்தின் பொழுது கதிர்காமத்திற்குச் செல்வதற்கு முன்பு ஸ்ரீ செல்வச்சந்நிதிக்கு வருகை தந்து அதன் பின்பு கதிர்காமத்திற்கு செல்வதற்குரிய திட்டத்துடன் இங்கே வந்திருந்தனர். இவர்கள் அகண்ட நாம பஜனையின் பொழுது பூசிக்கின்ற சிவலிங்கத்தை தாம் பிரயாணம் செய்கின்ற வாகனத்திலேயே பக்குவமாகவும், பாங்காகவும் அதற்கென தனியாக ஒதுக்கப்பட்ட இடத்தில் வைத்து வாகனம் வீதியில் செல்லும் பொழுது ஒலிபெருக்கியின் மூலம் பஞ்சாட்சர மந்திரத்தை ஓதுவதற்குரிய ஒழுங்குகள் செய்திருந்தனர்.

இவ்வாறு திட்டமிட்டு பல முன் ஆயத்தங்களுடன் இவர்கள் சந்நிதிக்கு வந்தமையால் பஜனை செய்யும்பொழுது தொடர்ச்சியாக கற்பூர தீபத்தை மேற்கொள்வதற்கு வசதியாக பெருந்தொகை கற்பூரத்தையும் தம்முடன் எடுத்து வந்தனர். ஆனால் கொண்டுவந்த கற்பூரம் ஓரளவு பெரிய தொகையாக இருந்தமையால் அதனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வன்னிக்கூடாக யாழ்ப்பாணத்திற்கு எடுத்து வருவதில் சில தடைகளும் தாமதங்களும் ஏற்பட்டமையால் அவற்றை வைத்துவிட்டு வரும் நிலமை ஏற்பட்டு விட்டது.

ஆனாலும் சிவகுருநாத அடிகள் தலைமையில் வந்த அந்த அகண்ட நாம பஜனையை மேற்கொள்ளும் அடியார்கள் கூட்டம் தமது வாகனத்தில் தாம் திட்டமிட்டபடி சந்நிதி ஆலயத்தை வந்தடைந்தனர். அதுமட்டுமல்ல தாம் எதிர்பார்த்து வந்தது போல அன்று மாலையே இருபத்துநான்கு மணிநேர தொடர்ச்சியான அந்த அகண்ட நாம பஜனையை மேற்கொள்ள முடிவு செய்தனர்.

இருந்த போதும் பஜனையின் பொழுது 24 மணி நேரமும் தொடர்ச்சியாக கற்பூர தீபத்தை ஒளிரச் செய்வதற்குத் தேவையான கற்பூரத்தை அந்த நேரத்தில் எங்கே பெற்றுக் கொள்வது எப்படிப் பெற்றுக் கொள்வது என்று சிந்திக்கத்தொடங்கினர். உண்மையில் அவர்கள் என்ன செய்வது என்று தெரியாது குழப்பமடைந்தனர். இந்த நிலையில் அந்த அடியார் கூட்டத்திற்கு பொறுப்பேற்று தலைமைதாங்கி வழிநடத்தி வந்த சிவகுருநாத அடிகள் அசையாத இறைபக்தி கொண்டவர் என்பதால் "யாமிருக்கப் பயமேன்" என்ற வாக்குடன் அபயமளித்துக் கொண்டிருக்கும் கலியுகக்கந்தன் சந்நிதியானை மனதில் நினைத்தவண்ணம் அமைதியாகச் செயற்பட்டுக் கொண்டிருந்தார்.

ஆலயச்சூழலில் இருந்த அன்பர்களினால் வழிப்படுத்தப்பட்ட சிவகுருநாத அடிகள் சந்நிதியான் ஆச்சிரமத்திற்கு வருகைதந்து ஆச்சிரமத்தின் சுவாமிகளைச் சந்தித்தார். சுவாமிகளிடம் தமது இக்கட்டான நிலமையைத் தெளிவுபடுத்தி தங்களுக்கு ஏதாவது வகையில் உதவுமாறு கேட்டுக் கொண்டார். சந்நிதியானை நாடிவருகின்ற அடியார்களின் நன்மைக்காகவே செயற்பட்டுக் கொண்டிருக்கும் ஆச்சிரமத்தின் சுவாமிகள் எந்தத்தயக்கமுமின்றி ஆச்சிரமத்தின் பூஜை அறையில் எழுந்தருளியிருக்கும் சுவாமிகளுக்கு நித்திய பூசைகளுக்கு பயன்படுத்துவதற்காக பிரபல்ய சைக்கிள் விற்பனையாளர் மணியம் குடும்பத்தால் வழங்கப்பட்டு பயன்படுத்திக் கொண்டிருக்கும் தன்னிடம் இருந்த விளைவு கற்பூரம் முழுவதையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்படியே எடுத்து வந்து இரண்டு கைகளாலும் சிவகுருநாத அடிகளிடம் கையளித்தார். பூரணதிருப்தியுடன் அதனைப் பெற்றுக்கொண்ட சிவகுருநாத அடிகள் தாம் திட்டமிட்டபடி 24 மணிநேர பஜனையை ஆலயத்தில் ஆரம்பித்தார்கள்.

சந்நிதியான் மூலஸ்தானத்தில் வேல்வடிவில் மிகவும் எளிமையாக வீற்றிருந்தாலும் பக்தர்களின் பக்தி நிலையை மிகவும் ஆழமாக உணரக்கூடியவன் அல்லவா. அந்தவகையில் ஆச்சிரமத்தின் சுவாமி அறையில் மேற்கொள்ளப்படும் நித்திய பூஜையின் சிறப்பையும், புனிதத்தையும் புரிந்து கொண்ட சந்நிதியான் இங்கே தனது திருவிளையாடலை மேற்கொள்ள திருவுளம் கொண்டார்.


அடுத்த நாள் நேரம் மு. ப 11 மணியளவில் ஆலயத்தில் அகண்ட நாம பஜனை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இங்கே ஆச்சிரமத்தின் மண்டபத்தில் வெள்ளி நிகழ்வு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது ஆச்சிரமத்தின் சுவாமிகள் வெள்ளி நிகழ்வு முடிவடைந்தவுடன் பூஜை அறையில் பூஜையை நடாத்துவதற்கு வசதியாக முன் ஆயத்தங்களை முடித்தபின் நடைபெற்றுக் கொண்டிருக்கும் நிகழ்வை செவிமடுத்தபடி ஆச்சிரமத்தின் வாசலில் சிறிது ஓய்வாக அங்கும் இங்கும் உலாவிக் கொண்டிருக்கிறார்கள். அதேநேரம் வாசலில் வாகனம் ஒன்று வந்து நிற்கிறது. வாகனத்திலிருந்து அரைகுறையாகப் பொதி செய்யப்பட்ட ஒரு பொதியை இரண்டு கைகளிலும் ஏந்தியவாறு வாகனத்திலிருந்தபடியே ஆச்சிரமத்தின் சுவாமிகளிடம் "இந்தாருங்கள் ஐயா இதை வைத்துக் கொள்ளுங்கள். உங்களிடம் இதைத் தந்து விட்டுச் செல்வதற்காகத் தான் வந்தேன் நான் ஒரு நிமிடம்கூட இங்கே நிற்பதற்கு நேரமில்லை" என்று கூறியபடி திரும்பிச் சென்று விட்டார்.

ஆம்! சுவாமிகளிடம் கையளிக்கப்பட்டது கற்பூரம் அதுவும் நேற்றைய தினம் ஆச்சிரமத்தின் சுவாமிகள் சிவகுருநாத அடிகளிடம் கையளித்தது போன்ற விளைவு கற்பூரம் ஏறத்தாழ அதே அளவு முழுமையாகப் பொதி செய்யப்படாத அதே வகையான உருவ அமைப்பு. ஆம் நேற்று வழங்கப்பட்ட அதே அளவு கற்பூரம் இன்று ஆச்சிரமத்திற்கு திரும்பவும் வந்து சேர்ந்துவிட்டது. ஆச்சிரமத்தின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூஜை அறையிலும் கற்பூர தீபத்துடன் பூசை குறைவின்றி நடைபெற்றது.

கற்பூரத்தை ஆச்சிரமத்திற்கு கொண்டு வந்து வழங்கியவர் யாழ்ப்பாணத்தில் கடந்தகாலங்களில் பிரபல்யமான சைக்கிள் விற்பனையாளராக விளங்கிய மணியம்ஸ் உரிமையாளரின் மகன் றஞ்சன் என்பவர். இவர் தற்பொழுது கொழும்பில் எசன்ஸ் விநியோகஸ்தர் என்ற பெயரில் வியாபாரம் செய்துகொண்டிருக்கிறார்.



இவர்ஆச்சிரமத்திற்கு மிகவும் அறிமுகமானவர் என்றாலும் அன்றைய தினம் வழமைக்கு மாறாகவே குறுகிய கால இடைவெளியில் கற்பூரத்துடன் ஆச்சிரமத்திற்கு வருகை தந்ததுடன் வழமைக்குமாறாகவே நடந்து கொண்டது மட்டுமன்றி இதைத்தருவதற்காகவே நான் வந்துள்ளேன் என்று கூறிச் செயற்பட்டதெல்லாம் சந்நிதியானின் திருவிளையாடலாலேயே நடந்தேறியது. என்பதைத் தவிர வேறு எந்த விளக்கத்தை எம்மால் கூறமுடியும்.

ஓம் முருகா!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்நிதியான் பன்னிரண்டு

திரு. சி. செல்வரெத்தினம் அவர்களுக்கு வயது 59 மாதனை தெல்லிப்பளை என்ற முகவரியில் குடியிருக்கின்றார். உள் அன்புடன் சந்நிதியானை நாடி வந்து அவனை தரிசித்துச் செல்வதே வாழ்க்கையில் தனக்குக் கிடைத்த பெரும் பேறு என்று எண்ணிச் செயற்பட்டுக் கொண்டிருப்பவர்.

திரு. செல்வரத்தினம் அவர்களின் மனைவியின் பெயர் சின்னம்மா. இவர்களுக்கு பிள்ளைச் செல்வம் இல்லை என்பதால் கணவனும் மனைவியும் ஒருவருக்கு ஒருவர் உறுதுணையாக வாழ்ந்து வருகின்றனர். அதுமட்டுமல்ல ஒருவர் வெளியில் சென்றால் திரும்பி வரும்பொழுது ஏதாவது சிறிய உணவுப் பண்டம் போன்றவற்றை வீட்டில் உள்ளவருக்கு வாங்கிச் செல்வதும் , வீட்டில் இருப்பவர் சிறு குழந்தையைப் போல அதை எதிர்பார்த்திருப்பதும் ஒரு வழமையான செயற்பாடாகும்.

ஏறத்தாழ ஒன்றரை வருடத்திற்கு முன்பு திரு செல்வரத்தினம் அவர்கள் ஆலயத்திற்கு வந்து வழமை போல கால்களைக் கழுவிய பின் ஆலயத்தைத் தரிசிப்பதற்காக ஆலயத்தை நோக்கி நடந்து செல்ல முற்படும் பொழுது தன் மனைவிக்கு அதனை வாங்கிச் செல்லீ வேண்டும் என்ற விருப்பம் ஏற்பட்டாலும் அவர்ஆலயத்திற்குச் சென்று முழு மனநிறைவுடன் எம்பெருமானை தரிசிக்கின்ற செயற்பாட்டில் ஈடுபடலானார்.

அவருடன் ஆலயத்திற்கு வருகை தந்த அவருடைய நண்பர்களும் வழிபாடு முடிந்த பின்பு ஆலய வாசலில் ஒன்று சேர்ந்தனர். அவர்களில் ஒருவரான ஆசிரியர் திரு. து. கணேசமூர்த்தி அவர்கள் தனக்கு ஆலயத்தில் கிடைத்த பிரசாதமான மோதகத்தை தனது நண்பர்களுக்கு பங்கிட்டுக் கொடுத்து ஆலய வீதியில் வைத்து அவற்றை அனைவரும் அருந்தலானார்கள். எதையும் தன் மனைவிக்கும் பங்கிட்டுக் கொடுத்து உண்ணுகின்ற பழக்கமுள்ள திரு. செல்வரத்தினம் அவர்களுக்கு அப்பொழுது தன் மனைவியின் ஞாபகம் வந்தது. ஆனாலும் ஏற்கனவே கடையில் மோதகம் இருப்பதையும் அதனை மனைவிக்கு வாங்கிச் செல்ல வேண்டும் என்று முடிவு செய்திருந்தாலும் தனது நண்பரால் வழங்கப்பட்ட அந்த மோதகத்தை மற்றவர்களுடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேர்ந்து தானும் உட்கொள்ளலானார்.

இதன் பின் ஆலய வீதியில் சிறிது நேரம் நண்பர்கள் ஓய்வாக இருந்தபின் வீடு திரும்ப ஆயத்தமானார்கள். அப்பொழுது திரு. செல்வரத்தினம் அவர்களும் கடைக்குச் சென்று தன் மனைவிக்கும் அங்கே இருந்த மோதகங்களை வாங்க முற்பட்ட பொழுதுதான் அந்த மோதகங்கள் முழுவதும் முடிவடைந்திருப்பதைப் பார்த்து அதிர்ச்சியடைந்தார். எதையும் தன் மனைவியுடன் பகிர்ந்து உண்ணும் பழக்கமுள்ள அவருக்கு அன்று தான் மட்டும் மோதகத்தை உட்கொண்ட நிலையில் தன் மனைவிக்கு அதனை வழங்கமுடியாத தர்மசங்கடமான நிலமை ஏற்பட்டதையிட்டு கலக்கமும் கவலையும் ஏற்பட்டது மாத்திரமன்றி கண்களில் கண்ணீரும் வந்து விட்டது.

மிகப்பெரிய குற்றம் செய்தவர் போல அவரதுமனம் துடிக்கத் தொடங்கியது. இந்தநிலையில் நான் என்ன செய்வேன்! இதை யாரிடம் சொல்லி பரிகாரம் காணுவேன்! என நினைத்து குழப்பமடையத் தொடங்கினார். இறுதியில் சந்நிதியானிடம் தனது கவலையையும் சங்கடமான நிலையைப் பற்றியும் முறையிட்ட அவர் எவ்வாறு நிம்மதியுடன் நான் வீடு செல்வேன் என்று தவித்த மனத்துடன் செய்வதறியாது அந்தக்கடையிலேயே அப்படியே இருந்து விட்டார்.

அப்பொழுது அந்தக் கடைக்கு தேனீர் அருந்த வந்த அன்பர் ஒருவர் இவருக்கு அருகில் இருந்து தேனீர் அருந்திய பின் திரும்பிச் செல்லும் பொழுது திரு செல்வரத்தினம் அவர்களிடம் இந்தாருங்கள் இது சந்நிதியானுடைய பிரசாதம் எனக்கூறி ஒரு மோதகத்தை வழங்க முற்பட்டார் இவ்வாறான ஒரு சம்பவத்தை சிறிதும் எதிர்பாராத திரு . செல்வரத்தினம் அவர்கள் மெய் சிலிர்க்க... நாத்தடுமாற.. இந்த மோதகத்தை எனக்கா தருகின்றீர்கள்... உங்களை எனக்கு யாரென்று தெரியவில்லையே அத்துடன் கடைக்குள் இருக்கும் பொழுது தருகின்ற இந்த மோதகத்தை நான் வாங்குவது முறையா எனக்கூறி பதட்டம் அடைந்தார்.

ஆரம்பத்தில் கவலையுடன் காணப்பட்டு தற்பொழுது பதட்டமடைந்து கொண்டிருக்கும் திரு. செல்வரத்தினத்தை நன்கு கவனித்த கடை உரிமையாளர் திரு. செல்வரத்தினத்தைப் பார்த்து அவர் அதைத்தருகின்ற பொழுது ஏன் யோசிக்கின்றீர்கள் அதைப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றுக் கொள்ளுங்கள் சந்நிதியானுடைய ஆலயச்சூழலில் பிரசாதத்தைத் தரும்பொழுது அது எந்த இடமாக இருந்தாலும் அதனைப் பெற்றுக்கொள்வதுதான் முறை எனக்கூறிய பொழுது திரு. செல்வரத்தினம் அவர்கள் அந்த மோதகத்தை பயபக்ததியுடன் பெற்றுக்கொண்டார்.

கேட்பவர்களுக்கெல்லாம் அள்ளிக்கொடுப்பவன் சந்நிதியான் என்று கேள்விப்பட்டுள்ள திரு. செல்வரத்தினம் அவர்களுக்கு இங்கே சந்நிதியான் கேட்காமலே கொடுத்தது மாத்திரமல்ல மருதர் கதிர்காமர் பரம்பரையின் வழித்தோன்றலான கடை உரிமையாளர் ஊடாக சந்நிதியான் அதை நான் தான் தருகின்றேன் நீ எந்தக்கவலையுமின்றிப் பெற்றுக்கொள் என்று சொல்லிக்கொண்டிருக்கின்ற அற்புதத்தை அவரது உள்ளம் உணரத்தொடங்கியது. ஆம்! உலகத்தில் இதைவிட வேறு ஒரு பாக்கியம் உண்டா? என்று அவரது உள்ளம் ஆனந்தத்தின் எல்லைக்குச் செல்லத் தொடங்கியது அவரது உதடுகள் கந்தா, கடம்பா, கார்த்திகேயா, கலியுகக்கந்தா என்று சந்நிதியானது நாமங்களை உச்சரிக்கத் தொடங்கியது.

ஓம் முருகா!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்நிதியான் பதின்மூன்று

உலகில் நடைபெறுகின்ற விடயங்கள் எதுவுமே தானாக நடப்பதில்லை. இறை நம்பிக்கை தொடர்பான விடயங்கள் உட்பட அனைத்து காரியங்களுமே அவை மேலோட்டமாகப் பார்க்குமிடத்து தானாக நடப்பது போலத் தெரிந்திருந்தாலும் அவை அனைத்தும் காரணகாரியத்துடனேயே நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தின் நித்திய பூசையின் பொழுது தினமும் 64 ஆலம் இலைகளில் நைவேத்தியம் படைக்கப்பட்டே பூசை நடாத்தப்படும் இவ்வாறு பெருந்தொகை அமுது படைக்கப்படுவதை எந்தப் பூசகரும் தமக்கு சுமையாகக் கருதுவதில்லை. அதேநேரம் இவ்வாறு பெருந்தொகை அமுதினை படைக்கக்கூடிய வசதிகளையும் வாய்ப்புக்களையும் சந்நிதியான் பூசகர்களுக்கு ஏற்படுத்துவதற்கும் தவறுவதில்லை.

இதேபோன்று ஸ்ரீ செல்வச்சந்நிதியில் இடம்பெறும் அன்னதானப்பணிகளை மேற்கொள்வதில் முக்கிய பங்கு வகிக்கும் சந்நிதியான் ஆச்சிரமமும் இந்தப் பணியை ஒரு சுமையாக எப்பொழுதும் கருதியதில்லை. உபயகாரர் இல்லாத ஆனால் பெருந்தொகையான அடியார்கள் கூடுகின்ற தினங்களிற்கூட எந்தவித குறையுமின்றி ஆச்சிரமத்தால் அன்னதானம் வழங்கப்படுகிறது. இவ்வாறு வழங்கப்படுவதற்குரிய வசதிகளையும் வாய்ப்புக்களையும் சந்நிதியானே ஏற்படுத்துகின்றான் என்பதற்குரிய சம்பவங்கள் நடந்த வண்ணமே உள்ளன.

இவ்வாறு சந்நிதியானே வசதி வாய்ப்புக்களை ஏற்படுத்துகின்றான் என்பது தொடர்பாக அண்மையில் நடந்த சம்பவத்தை இங்கே அடியார்களுடன் பகிர்ந்து கொள்கின்றோம். உடுப்பிட்டி வதிரி றோட்டில் நவிண்டில் என்ற முகவரியில் வசிக்கும் திரு. திருமதி. மயில்வாகனம் நாகேஸ்வரி குடும்பத்தினர் சந்நிதியில் நடைபெறும் நித்திய அன்னப்பணிக்கு வருடா வருடம் தவறாது தமது பங்களிப்பை வழங்கி வருபவர்கள். குறிப்பாக சந்நிதி உற்சவ காலத்திற்கு முன்பு இந்தப் பங்களிப்பை வழங்குவது வழக்கம்.

திரு. திருமதி. மயில்வாகனம் மட்டுமல்ல அவர்களது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளைகளும் கூட இறை அன்பு உள்ளவர்களாகவும் ஆலயத்திருப்பணி செய்பவர்களாகவும் இருப்பதை எம்மால் உணர முடிகிறது துவாளிப்பிள்ளையார், குலானை அம்மன் ஆலயம், கந்தவனக் கோயில் போன்ற ஆலயங்களின் திருப்பணி வேலைகளில் தற்பொழுதும் கணிசமான பங்களிப்பை இந்தக் குடும்பத்தினர் வழங்கியுள்ளனர் தற்பொழுது திரு. மயில்வாகனம் அவர்கள் இறைபதம் அடைந்து விட்ட நிலையில் அவரது மனையியும் மக்களும் இந்தக் காரியங்களை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்த வருடம் சந்நிதி உற்சவம் முடிவடைந்து பலவாரங்கள் சென்று விட்டன. ஒருநாள் காலையில் ஆச்சிரமத்தின் வாசல் கதவை திறந்துகொண்டு தன்னிடம் யாரோ வருவதை சுவாமிகள் அவதானிக்கிறார். அது வேறுயாருமல்ல திருமதி நாகேஸ்வரி மயில்வாகனம் அவர்கள் தான் அங்கே வந்துகொண்டிருந்தார். திருமதி. நாகேஸ்வரி அவர்கள் ஆச்சிரமத்தின் சுவாமிகளைப் பார்த்து " நாங்கள் உரியகாலத்தில் உரிய வேலைகளைச் செய்ய மறக்கலாம் ஆனால் சந்நிதியான் எதையும் மறக்கவும் மாட்டான் எங்களை சும்மாவும் இருக்கவும் விடமாட்டான்" என்று கூறி நடந்து முடிந்த உற்சவகாலத்தில் அன்னதானப் பணிக்குத் தனது பங்களிப்பை உரிய காலத்தில் வழங்கத் தவறியதை எடுத்துக்கூறி தனது வழமையான பங்களிப்பை சுவாமிகளிடம் வழங்கிய பின் அவசரமாகத் திரும்பிச் சென்று விட்டார்கள்.

மேற்படி நடந்து முடிந்த சம்பவத்தை மேலோட்டமாக அறிந்து கொண்ட அடியேன் அந்தப் பாதை வழியால் வருகின்ற சமயம் நாகேஸ்வரி அம்மாளுடைய வீட்டுக்குச் சென்று அடியேனை அம்மையாரிடம் அறிமுகப்படுத்திக் கொண்டேன் எப்பொழுதும் இறைவன் சிந்தனையுடனேயே செயற்பட்டுக்கொண்டிருக்கும் அம்மையார் அவர்கள் அடியேனை வணக்கம் செலுத்தி அன்புடன் வரவேற்றார். அப்பொழுதும் அவர் சந்நிதியான் மேற்கொண்ட திருவிளையாடலில் இருந்து மீளமுடியாதவராய் இருப்பதை அடியேனால் உணரமுடிந்தது. அடியேன் கேட்டுக்கொண்டதற்கிணங்க நடந்த சம்பவத்தை மெய்சிலிர்க்க பகிர்ந்து கொண்டார்.

இந்தவருடம் சந்நிதி உற்சவ காலத்தில் சிறிது பணக்கஷ்டம் இருந்தமையால் திருகோணமலையிலிருந்து தனக்கு கிடைக்க வேண்டிய


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணம் கிடைத்த பின்பு சந்நிதியானுடைய பங்களிப்பை வழமைபோல ஆச்சிரமத்துக்குச் சென்று வழங்க யோசித்திருந்ததாகவும் ஆனால் அவ்வாறு பணம் கிடைத்த பின்பும் அதனைச் செலுத்தாமல் தான் தாமதித்தது பெரிய தவறு என்பதை எடுத்துக்கூறினார். இந்த நிலையில்தான் இறைபதம் அடைந்த தமது கணவர் மயில்வாகனம் அவர்கள் கனவிலே தோன்றி தன்னை பல்வேறு ஆலயங்களுக்கு அழைத்துச் சென்று இறுதியாக சந்நிதி ஆலயத்திற்கு அழைத்து வந்து அங்கே விடுவதாகக் கனவு கண்டுள்ளார்.

இவ்வாறு நடந்து முடிந்த கனவின் மூலம் உரியகாலத்தில் அன்னதானப் பணிக்கு அளிக்க வேண்டிய பங்களிப்பை அளிக்கத்தவறிய தவறினை உணர்ந்து கொண்டதாகவும் அதனால் தனது சுகவீனத்திற்காக யாழ்ப்பாணத்திற்கு கிளினிக் காட்டப் போகும் வழியில் சந்நிதியானைத் தரிசித்து விட்டு ஆச்சிரமத்திற்குச் சென்று தான் செலுத்த வேண்டிய பங்களிப்பை செலுத்திவிட்டு அவசரமாகச் சென்றதாகவும் குறிப்பிட்டார்.

ஆனால் அப்பொழுது அங்கே தான் ஆலயத்தில் தவறு செய்ததையும் அதனால் தான் மீண்டும் ஒருமுறை சந்நிதியானிடம் சென்று கண்குளிர சந்நிதியானை வழிபட்டது பற்றியும் கண்களில் நீர் வழிய எடுத்துக்கூறினார். ஆம் நாகேஸ்வரி அம்மாள் முதல் முறை ஆலயத்திற்குச் சென்று சந்நிதியானை வழிபட்ட பின் அர்ச்சனை செய்வதற்கு ஐயரிடம் பணம் செலுத்தியதாகவும் அப்பொழுது கந்தபுராணப் படிப்புக் காரணமாக 10 நிமிடங்கள் பொறுத்திருக்குமாறு தன்னிடம் ஐயர் கேட்டபொழுது ஆஸ்பத்திரிக்குச் செல்லும் அவசரத்தில் தான் ஆஸ்பத்திரிக்குச் சென்று விட்டதாகவும் ஆனால் ஆஸ்பத்திரியில் பல மணி நேரம் வீணாக காத்திருந்து தான் கஷ்டப்பட்டது பற்றியும் எடுத்து விளக்கினார்.

இவ்வாறான கஷ்டத்துடனும் மனக்கவலையுடனும் நித்திரைக்குச் சென்ற திருமதி நாகேஸ்வரி அம்மையாருக்கு அன்று இரவு நித்திரையில் சந்நிதி ஐயர் பூசை முடிந்து திருநீறு வழங்குவதாகவும் திருநீற்றுடன் சில தானியங்களையும் வழங்குவதாகவும் கனவு கண்டுள்ளார்.

இந்த நிலையில் அடுத்தநாள் சந்நிதி ஆலயத்திற்குச் சென்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆறு அமர சந்நிதியானை வணங்கிய பின் சந்நிதியானுக்கு திருப்தியாக அர்ச்சனை செய்தார் என்ன அதிசயம் அங்கே ஐயர் வழங்கிய அர்ச்சனைப் பெட்டியில் நவதானியங்களில் ஒன்றான நெல்மணிகள் ஒட்டியிருப்பதைப் பார்த்ததும் தன்னையே நம்பமுடியாத வியப்பில் உறைந்து போய்விட்டார். தற்பொழுதும் அந்த வியப்பிலிருந்து மீளமுடியாத அம்மையார் அவர்கள் அந்த நெல்மணிகளை வீட்டுப்பூசை அறையில் பயபக்தியுடன் வைத்து பாதுகாத்து வருகின்றார்.

சந்நிதியானுடைய திருப்பாதங்களுக்கு அடிமையானவர்கள் சந்நிதியின் அன்னதானப் பணிக்குபங்களிப்புச் செய்பவர்கள் எல்லோரும் சந்நிதியானுடன் இரண்டறக் கலந்தவர்கள் ஆகின்றனர். இவர்கள் சந்நிதியானை மறந்தாலும் சந்நிதியான் இவர்களை மறப்பதில்லை.

ஓம் முருகா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாயன்மார் காலத்தில் மட்டுமல்ல தற்பொழுதும் ஆண்டவனின் அற்புதங்கள் நடைபெற்றுக் கொண்டுதான் இருக்கின்றன. கலியுகக்கந்தன் சந்நிதி முருகனின் அற்புதங்கள் இதனை இப்பொழுதும் எமக்கு எடுத்துக்காட்டிக் கொண்டிருக்கின்றன. இவற்றில் மானிட அறிவுக்குட்பட்ட எம்மால் உணரக்கூடிய ஒரு சில துளிகள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன.

இந்த நிஜங்களை நீங்கள் வாசிப்பதற்கு கிடைத்த சந்தர்ப்பம் கூட ஒருவகையில் உங்களுக்கு கிடைத்த ஒரு பேறுதான் என்பதை இதனை உணர்வுடன் வாசிக்கும் பொழுது நீங்கள் உணர்ந்து கொள்ளமுடியும்.

- ஆசிரியர் -

தமிழ்ப்பூங்கா, நெல்லியடி. - 021 2264014

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org